---


தாயுமானவரின்
இலக்கிய நயம்
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# தாயுமானவரின்

# இலக்கிய நயம்

மன்னார்குடி பானுகுமார் M.A..H.D.C.

ராஜம் பதிப்பகம்   EBOOK PUBLISHERS

-----------------------------------------------------------------------------------------------------------------------

# பொருளடக்கம்


1. தாயுமானவர் தாயுமானவர்தான்
2. தாயுமானவரின் பாட்டுத் திறன்.
3. தாயுமானவரின் நடை
4. தாயுமானவரின் கற்பனை
5. தாயுமானவரின் தொடர் ஆட்சி
6. தாயுமானவர் பாடல்களில் உவமைகள்
7. தாயுமானவரின் ஓசைநயம்
8. தாயுமானவரின் இலக்கிய மரபுகள்.
9. தாயுமானவரின் பழமொழிகள்




--------------------------------------------------------------------------------------------------------------

# 1.தாயுமானவர் தாயுமானவர்தான்

வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே இலக்கியமாகும். அது சில குறிப்பிட்ட காலச் சூழலில் வலுப்பெற்றுத் திகழும்.

இலக்கியங்கள் காலம் கடந்து வாழும் தகுதி பெற இலக்கிய நலம் செறிந்திருத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

1. கவிதைக்கு ஆழமும், ஆற்றலும் தருவன செறிவான சொற்கள், சொற்கள் செவ்வையாக அமையாவிடில் கவிதை தனது அழகையிழக்க நேரிடும்.
2. சொற்கள் ஆழமான பொருள் தந்து. சொல்லப்படும் கருத்தை தெளிவாக விளக்கம் வண்ணம் அமைதல் வேண்டும். அங்ஙனம் அமையும் கவிதை சிறப்புப் பெறுகிறது.

3. இலக்கிய நயமாவது செய்யுளில் பயின்று வரும் கற்பனை, உவமை, உருவகம், முதலான அணிகள், இயற்கை, வருணனை, ஓசை நலம், யாப்பமைதி போன்ற முன்னோர் மொழி பொருள் போற்றும் கருத்துக்கள் நூலுட் பயின்றுள்ள தன்மைகளே நுணுகிக் காண்பதாகும்.

கவிதையையே கருவியாகக் கொண்டு, மனிதனை மகிழ்விக்க ஒருவன் பாடினான். மனிதன் சிந்தனை செயல் இழக்குமளவிற்கு ஒருவன் பாடினான்.

மனிதனைப் புனிதனாக்க ஒருவன் பாடினான். மனிதனை மனிதானாக்க மற்றொருவன் பாடினான்,

மனிதனை அடிமையாக்கவும், அவனையே தெள்வமாகப் போற்றியும் பலர் பாடினர். எனினும் மனிதனை மனிதன் மதிக்க, நேசிக்க பாடியவர்கள் சிலரே.


அவர்களுள் ஒருவலரே தாயுமானவர். இவருடைய பாடல்கள் மனிதநேயத்தையும், ஆளுமை வளத்தையும், அமைதியையும் முதன்மைப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

“நான் மனிதனைப் பாடுகிறேன்” என்றார் அமெரிக்காவின் வால்ட் விட்டமன்.



---

“மனிதன் சம்பந்தமான எதுவுமே இலக்கியத்திற்குப் புறம்பானதன்று” என்றார் இரஷ்ய இலக்கிய மேதை மாக்ஸிம் கார்க்கி.




அலெக்ஸாந்தர் போப், வால்ட் விட்டமன், கார்க்கி போன்றவர்களெல்லாம் மனித நேத்தைப் பாடியவர்கள் ஆவார்கள். ஆனால்


“எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லால்

வேறுஒன்று அறியேன் பராபரமே” (பரா.221.தா.பா.856)

என மனிதநேயத்தோடு, அனைத்து ஜீவராசிகளும் அமைதியாக, ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்ற உயர்ந்த நெறியினைச் சமரச நோக்கோடு தாயுமானவரைத் தவிர வேறு யாரும் பாடியதில்லை.

ஷெல்லி, கீட்ஸ், வேர்ட்ஸ்வொர்த், பைரன், தாகூர் போன்றவர்களெல்லாம் கவிஞர்களாக மட்டுமே வாழ்ந்தவர்கள்.









(ஷெல்லி, கீட்ஸ், வேர்ட்ஸவொர்த், பைரன், தாகூர்,தாயுமானவர்.)

ஆனால் தாமானவரே மானுட சமுதாயத்தின் பொதுநல சேவகராக, மனிதநேயம் மிக்கவராக, மனித மனத்தை அறவழியில் கொண்டு செல்பவராக. மனித அறிவை வெளிக்கொணரும் அறிஞராக, மனித வளத்தினை வெளிக்கொணரும் மேன்மையாளராக திகழும் இவர் ஒரு நல்ல கவிஞராகவும் விளங்குகிறார்.

இவர் 1452 கவிதைகளை இயற்றியுள்ளார். பல்வேறு பொருள்களில் 56 தலைப்புகளில் தம் வாழ்வின் பல கட்டங்களில் தமது வாழ்க்கை அனுபவத்தையே பாடியுள்ளார்.

தாயுமானவரின் பாடல்கள், உடல் உயிர் உலகம் இறைவன் என இவற்றைப் பற்றிப் பேசுகின்ற தனிப்பாடல்களே. கதைப் பாடல்கள் அல்ல. ஆயினும் இவற்றை மானுடன வாழ்க்கைக் கதையினைக் கூறும் பாடல்கள் எனலாம்.

பக்தி பாடல்களை இலக்கியம் என்று கூறலாமா? என்ற கேள்விகூட தற்காலத்தில் எழுகின்றது. வாழ்க்கையபை பற்றி, அற்குரிய கூறுகளோடு கூறுபவை அனைத்தும் இலக்கியங்களே.

பக்திப் பாடல்கள் அல்லது சமயப் பாடல்கள் என நாம் பிரிப்பவை அனைத்தும் வாழ்வைப் பற்றித்தான் பேசுகின்றன.

இந்த உலகில் மிக முக்கியமானவை - அடிப்படையானவை உயிர்களே. உயிர்கள் இல்லையெனில் உலகில்லை.

இத்தகு முதன்மை வாய்ந்த உயிர்கள் பற்றிப் பேசாத இலக்கியங்களே கிடையாது.

இவ்வுயிர்களைத் தாங்கின்றவைகளே அல்லது அவ்வுயிரைக் கொள்ளும் பாத்திரங்களே உடல்கள்.

உயிருடைய அவ்வுடல்கள் வாழ்வதற்குரிய இடமாக இவ்வுலகம் அமைகின்றது.

இவ்வுயிரைத் தோற்றுவித்து அதனை இயக்கு நிலையில் ஒரு பொருள் அமைகின்றது.  அதனையே இயற்கை, சுத்தவெளி, வெட்டவெளி, இறைநிலை, இறையெனப் பல பெயர்களால் சுட்டுகிறோம்.

அடிப்படையை நன்கு ஆழ்ந்து நோக்கினால், உலகு, உடல், உயிர், இறை இவற்றுள்தான் வாழ்க்கை அமைந்துள்ளது என்பது தெளியும்.

எனவே இவற்றைப் பற்றிப் பேசும் பாடல்கள், வாழ்க்கை பற்றிப் பேசும் பாடல்களே எனின் அது பிழையாகாத.

“இலக்கியம், வாழ்க்கையின் எதிரொலி. சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல் கல்.  மனித இலட்சியத்தின் உயிர்நாடி” என்பது இலக்கியம் பற்றிய பொதுக் கருத்து.  அத்தகைய வாழ்க்கையைப் பிரதிபலிக்கும இலக்கியமே தாயுமானவர் பாடல்கள்.

தாயுமானவர் பாடல்கள் பாடுவதற்கென்றே அமைந்தவை. பாடுவதற்குரியனவே பாடல்கள்.  செய்யப்படுவது செய்யுள்.

கற்பனையோடு கலந்து கவிஞனால் இயற்றபடுவது கவிதை. தாயுமானவர் பாடல்கள் கவிதைகளாகவும் செய்யுள்களாகவும் பாடல்களாகவும் அமைந்துள்ளன.

இலக்கு என்பது நோக்கம், இயம் ஒலிப்பது. வெளிப்படுத்துவது. நோக்கங்களை வெளிப்படுத்துவது இல்கியம்.

கவிஞனின் கற்பனைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப எதுவும் கவிதைப் பொருளாக அமையலாம்.  பொருளுக்காகக் கவிதைகள் இயற்றலாம்.

ஆனால் பொருளற்ற கவிதைகள் கவிதைகளாய் பொருட்படுத்தப்பட மாட்டார்.

பொருள் என்பது அகப்பொருளாகவோ, புறப்பொருளாகவோ இருக்க வேண்டுமென்பதில்லை. அது மெய்ப் பொருளாகக் கூட இருக்கலாம்.

இங்கு தாயுமானவரின் கவிதைகளில் இலக்கிய நலத்தை கண்டு, தாயுமானவர் இலக்கியத் துறையிலும் தடம் பதித்து இலக்கிய வரலாற்றில் இடம் பிடித்துள்ளார் என்பதை இங்கு சிந்திப்பதே இந்த புத்தகத்தின் நோக்கமாகும்.

கவிதைகள் என்பன சொல்லழகும், பொருளழகும், தொடையழகும் ,அணியழகும், நடையழகும் கொண்டு விளங்குவன.

அவை கவிதைகளைப் படிப்பார் தம் உள்ளத்தை ஈர்ப்பன. நல்லறிைப் புகட்டுவன.

உள்ளத்தை ஈர்த்துச் சிந்தனையை மகிழவிக்கும் கவிதை நயத்தினை வெளிப்படுத்திக் காட்டலே இயலக்கிய நயமாகும்.



இராமநாதபுரம் தாயுமானசுவாமி ஆலயம்.



சுவாமி பரானந்த "தாயமானவரின் ஆனந்தக்களிப்பு" புத்தகம் வெளியிடுதல். அருகில் ஆசிரியர் மன்னார்குடி பானுகுமார்.

# 2. தாயுமானவரின் பாட்டுத் திறன்.

தாயுமானவர் கவிதைகள் கருத்தாழம் கொண்டவை. தேர்ந்தெடுத்த கருத்தை அசை போட்டு. அசைபோட்டு, எளிமையான மொழியமைப்பில் தனது கருத்தைப் புகுத்தி, கவிதையாக்கி நயத்தோடு வெளிப்படுத்தும் திறன் இவருக்கு உள்ளதை அறிய முடிகிறது.

தான் வாழ்கின்ற சூழல், சூழலில் நாடு மற்றும் மாந்தர், நிகழ்ச்சிகள், மனம், மனிதன் படைத்தவை போன்றவை அவருடைய படைப்புகளில் வெியாகின்றன.

"ஊரனந் தம்பெற்ற பேரனந் தம்.சுற்றும்

உறவு அனந்தம். வினையினால்

உடல் அனந்தம். செயும் வினை அனந்ம்.கருத்

தோ அனந்தம். பெற்றபேர்

சீர் அனந்தம். சொர்க நரகமும் அனந்தநற்

றெய்வமும் அனந்தபேதம்

திகழ்கின்ற சமயமும் அனந்தம். அதனால் ஞான


சிற்சக்தி யால் உணர்ந்து

கார் னந் தம். கோடி வருஷித்தது என அன்பர்
கண்ணும்விண்ணும் தேக்கவே,
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலை.நம்
கடவுளைத். துரியவடிவைப்

பேர் அனந்தம் பேசி மறையனம். தம்சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பைப்.
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தம். ஆம்
பெரிய பொருளைப் பணிகுவாம்." (திருவருள் விலாசப் பரசிவ வணக்கம். (பா.2.தா.பா.2)

இவ்வாறு தாயுமானவரது கவிதைகளில் பெருவாரியானவை கருத்துச் செறிவுள்ளவை. மொழிக் கட்டமைப்பைக் காட்டுபவை. மரபு மற்றும் புதுமணம் கொண்டவை. சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துபவை.






அவரவர் நூலறிவுக்கும், பட்டறிவுக்கும் உண்மை அறிவுக்கும் ஏற்பப் பற்பல நயங்களையும், நுட்பங்களையும் உணர்த்தும் வல்லமை வாய்ந்தது.

எதார்த்தமாகத் தன் மனதில் தோன்றியதை சொல்லலங்காரத்தோடு விளக்குகின்ற திறனை தாயுமானவரது கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.





# 3.தாயுமானவரின் நடை

தாயுமானவரது கவிதைகளில் மரபின் சாயலும், புதுமையின் எழிலும் இழையோடியுள்ளன.

அவைகளில் உலகளாவிய நோக்கும், விஞ்ஞானப் பார்வையும், மெய்ஞான அறிவும், மன உணர்வின் வெளிப்பாடும், இலக்கியம் போற்றலும் என பலவகைக் கருக்கள் உருப்பெறுகின்றன.

கவிதையின் நடை என்பது கவிதையின் கருத்திலும், கவியின் மொழியிலும்தான் புதைந்திருக்கிறது. கருத்தையும், மொழியையும் கையாளும் விதத்தில் தான் கவிதையின் நடை வெளிப்படுகிறது.




---

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் விலாசப் பரசிவ வணக்கம். (பா.1)






# 4. தாயுமானவரின் கற்பனை

தாயுமானவரின் பாடல்களில் கற்பனை மிகுதியாகப் வந்துள்ளது எனக் கூறுவதற்கில்லை.

ஆயினும் அவர் கையாளும் சில வருணனைகள் உவமைகள் கற்பனை நயத்துடன் காட்சியளிக்கின்றன.

இந்த உலகம் ஐந்து பூதங்களால் உண்டானது. நிலம், நீர், நெருப்பு. காற்று, விண் என்பன அவை. இதுபற்றிக் கருத்து வேறுபாடோ ஐயமோ இருக்காது.



---

நம் உடலும் இந்த ஐந்து பூதங்களால் அமைந்ததுவே. இதைத்தான் மாணிக்கவாசகர் “அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது” என்றார்.



அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுக் காதை உரையில் மிடற்றை விளக்கும் போதும் இவ்வெண்ணம் தெரிகின்றது.

ஆகவே. இந்த உடலே ஒரு சிறு உலகம்தான். இந்த உடலாகிய உலகத்தைப் பார்த்தால் பெரிய கடல்நீர் போன்ற கடலில் இருந்து ஓர் உழக்கு முகந்து எடுத்து வைத்தது போல் இருக்கின்றதாம்.

சிறு உலகமாகிய இச்சிறு வீட்டில் ஒன்பது வாயில்கள் இருப்பது அனைவரும் அறிந்ததே. சலிக்கும் இச்சிற்றில், தேரை ஒத்து அமைகின்றது.

முப்புரம் எரிக்கச் சிவானர் நிலத்தைத் தேராகக் கொண்டமைபோல், காமன் காம விழா நிகழ்த்த நிலம் - அதாவது மண்ணாலாகிய இம் மெய்யே தேராகக் கொள்ளப்படுகின்றது.

இங்கு “மதவேளாக அமைவது “நான்” என்னும் ஆணவமே. என்புத் தசைப்பொதிவால் அழகுறக் கொண்ட உடம்பாகிய தேரை, விழவுக் கிழுத்ததுச் செல்லக் கயிறாக அமைவன நரம்புகள்.

“புறவழகுடைய இந்த உடல் வெண்ணீரும் செந்நீரும் கண்ணீரும் மலநீரும் புண்ணீரும் பொருந்திய இயல்பால் இறைச்சித் துருத்தி யாகத்தான் அமைகின்றது.

அதோடு பிறவிக்கு வித்தாக அமைகின்ற கருவுக்குப் , பிறவினை தீர்க்க அளிக்கப்பட்ட உடல்எனும் நிலையில் (கரு) மருந்திற்கு கூட்டாக அமைகின்றது இந்த உடம்பு.

ஊனுண் போர் வயிற்றைப் புள்ளுக்கும் விலங்குக்கும் காடாகக் கூறுகின்றார் தாயுமானவர்.

விடக்குத் துருத்தியாம் உடம்பைச் சுடுகாடாகவும் அதையே நிலைகளமாக, நிலமாகக் கொண்டு வளர்க்கின்ற வேட்கை மரம், முளையிலேயே கிள்ளாததால் முதிர்ந்து வெட்ட வெட்ட அழியாத மீண்டும் தளிர்க்கின்றமையையும் கற்பனை நயம்பட எடுத்து மொழிகின்றார்.

வெட்ட வெட்ட தளிர்க்கும்மரம் போன்ற ஆசைகள், அவை அடக்க அடக்க பெருகி எழுகின்றன. இத்தகு பொய்யான உடம்பை மெய் என்று கருதும்நிலை பொருந்துமா?

இவைகளைச் செலுத்துகின்ற பேரறிவே, மூதறிவே உண்மையென உணராமல் அமைதல் ஏற்புடைத்தோ? எனக் கேட்கிறார்.

-------------------------------------------------------------------------------------------------------------------

குடக்கொடு குணக்காதி திக்கினை உழக்கூடு
    கொள்ளல்போல் ஐந்துபூதங்
கூடம் சுருங்கு இலைச் சாலேகம் ஒன்பது
    குலாவுநடை மனையை, நாறும்

வடக்கயிறு வெண்நரம் பா, என்பு தசையினால்
    மதிவேள் விழாநடத்த
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செந்நீர் கணீர்
    மலநீர்புண் நீர் இறைக்கும்

விடக்குத் துருத்தியைக், கருமருந்துக் கூட்டை,
    வெட்டவெட் டத் தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
    மெய்போல் இருந்துபொய்யாம்

சடக்கைச், சடக்கெனச், சதம் என்று சின்மயம்
    தானாகி நிற்பது என்றோ?
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
    சச்சிதானந்தசிவமே. (சச்சிதானந்தசிவம் 2 -தா.பா.101.)



## பொய்யாகும் உடம்பு

மேற்கு, கிழக்கு முதலிய திசைகளை உழக்கு என்னும்அளக்கும் கருவியில் முகப்பது போல,

- ஐந்த பூதங்கள் ஒன்று கூட,
- அவற்றைக்கொண்டு கட்டப்பட்ட சிறிய இல்லத்தை,
- சன்னல்கள் ஒன்பதுடன் விளங்கும் நடமாடும் வீட்டை,
- துர் நாற்றம் வீசுகின்ற வெள்ளை நரம்பு வடக்கயிறாக எலும்பு, தசை முதலியன கொண்டு,
- மன்மதன் திருவிழா நடத்தச் செய்து அமைத்த சிறிய தேரினை,
- கோழை ஆகிய வெண்ணீரும், இரத்தமாகிய செந்நீரும், கண்களில் வடியும கண்ணீரும்,
- கழிவாக வெளியேறும் சிறுநீரும், சீழ் எனப்படும் பண்ணீரும்
- ஆகிய இவற்றை இறைக்கும் இறைச்சியால் ஆகிய தோல் பையை,
- கரு என்னும் மருந்து உற்பத்தி செய்யும் கூட்டை,
- வெட்ட வெட்ட துளிக்கின்ற ஆசையாகிய மரம் வளரும் சுடுகாட்டை,

- மெய்போல இருந்து முடிவில் பொய்யாகும் உடம்பை,

நிலை இல்லாதது என்று உணர்ந்து. சிவஞானம் பெற்று இருப்பது என்றைக்கோ?

இலக்கியம் மிகச் சிறந்த கலை. இருப்பதை அவ்வாறே கூறுவது நிழற்படம் போன்ற நிலை.

இதில் இருப்பதையே தரமுடியும். அதைச் சிறந்த நிலையில் செம்மைப்படுத்தலாம் என்பது உண்மையே.

அதையே இன்னும் தம் விருப்பம்போல் சிலைவடிவில் அமைக்க நினைக்கின்றனர். அஃது அடுத்த நிலை.

அதனையே நாம் ஓவியமாக்கும்போது நினைக்கின்ற, விரும்புகின்ற சிறப்புகள் அனைத்தும் இணைத்துவிட முடியும். அதுவே சிறந்த நிலை எனக் கூறலாம்.

சில இலக்கியங்கள் இருப்பதை அவ்வாறே கூறுகின்றன. இன்றையக் கவிதை போன்று, மாதவிக்குச் சிலை பூம்புகாரில் இப்போது வடித்தது போன்ற அடுத்த நிலையில் சங்க இலக்கியங்களை அடக்கலாம்.

ஓவியநிலை கம்பன் காவியம் போன்றது. காவியங்கள் இலக்கிய ஓவியங்களாக அமையும் நிலையே மிகச் சிறந்த நிலை. அத்தகு நிலையினது தாயுமானவரின் மேற்குறிப்பிட்ட கற்பனை.

திக்கனைத்தலும் ஐம்பூதங்களின் ஆட்சி நிலவுகின்றது. அதனை மனிதன் ஆள முயல்கின்றான்.

பூதங்களின் இணைவால் ஆன தன்னையே அவனால் அடக்க முடியவில்லை. கடலில் அலை ஆரவாரம். உணர்ச்சிகள் கொந்தளிக்கின்றன.

திடீரென நெருப்புப் பற்றி வருகின்றது. சினத்தீ எழுகின்றது. நில நடுக்கத்தால் உலகில் பல பாகங்களில் நாடுகளில் பலர் மடிவதைக் கேட்கின்றாம்.

மன நடுக்கம் மனிதனின் உறுதியைக் குலைத்து விட்டு அவனைக் கோழையாக்குகின்றது. பெரும் புயல் சுழன்றறடிக்கின்றது - அழிவுகள் பல்குகின்றன.

மனம் சூறாவளிப்போல் அடக்குவாரின்றி அவனை அலைக்கழிக்கின்றது.

இவ்வாறு பூதப் பண்புகளனை வெளியிடும் இந்த பூதஉடல் பொய், அஃது உண்மையாகாது. அழிந்துவிடும்.

அழியாது அடிப்படையாக அமைவன உண்மை, அறிவு, இனபம், இவைகளின் முதிர்ச்சியான இறைவன் என்பனவே.

இந்த உடல் அந்த உண்மையினை உணர, உயிரைத் தாங்கித் துணை புரிகின்றது.

அதற்கு மட்டுமே இந்த உடலைப் பயன்படுத்தலாமே தவிர, உண்மை எனக் கருதவியலுமா? என்பது தாயுமானவர் கேள்வி.

அறிவியல் ஆராய்ச்சி சாலை உள்ளது. அங்கு ஆய்வு செய்கிறோம். அந்த ஆய்வால் உலகம் நன்மை பெறுகின்றது.

அந்த ஆய்வுதான் முக்கியமே தவிர அந்தக் கட்டிடம் முக்கியமல்ல.

நல்ல சுவையான உணவுப் பொருள் பாயாசம். அதை ஒரு பாத்திரத்தில் வைக்கின்றோம். அப்பாத்திரம் அப்பொருளை வைப்பதற்கு மட்டுமே உரியது. பாத்திரம் முக்கியமல்ல.

பொருள்தான் முக்கியம். பாத்திரத்தை உண்ண முடியாது. பொருளைத்தானே உண்ண முடியும்.

ஆயின் அந்தப் பொருள் வைக்கின்ற பாத்திரத்தை அழகாகவும் தூய்மையாகவும் பராமரிக்காவிடின், வைத்த பொருள் கெட்டுப் போகும்.

நம் உயிராகிய நற் பொருளும் கெட்டுப் போகும். நம் உயிராகிய நற் பொருளை இந்த உடம்பாகிய பாத்திரத்தில் நற்பண்புகளாம் தூய்மையோடு, அன்பாம் அழகோடு காப்பாற்றவிடின் அந்தபொருள் பயனின்றி, பயன் கொள்ளவியலாது கெட்டுப் போகும்.

பிறவியைக் கடல் போன்றும், அதினின்று கரையேறுவதை வாழ்வின் இறுதி நோக்கமாகவும். திருவள்ளுவர் முதல் இக்காலத்தவர் வரைப் பாலர் கூறி வருகின்றனர்.

வாழ்க்கை கடல் போன்று பரந்து ஆழமானது தானே? வாழ்க்கைப் பிணைப்பாக அமையும் அன்பையும் இவ்வாறே விளக்குகின்றது குறுந்தொகை.

தான் காணும் பொருளைக் கொண்டுதான் கவிஞன் கருத்துக்களுக்கு விளக்கம் தேடுகின்றனான். விளக்குகின்றான்.

அவன் பார்க்கின்ற கோணம், பார்வை முழுப் பார்வையாகக் கற்பனை நயம்பட அமைவதால் அது சிறக்கின்றது.

பல்வகைப் பிறவிகள் உள்ளன. எந்த பிறவியாயினும் அது இருட்கடலாக அமைகின்றது. இருட்டில் கடலில் பயணம் செய்வது போன்றது வாழ்க்கை.

அறிவாகிய கைத்தோணியைக் கொண்டு அக் கடலைக் கடக்க முயலுகின்றான். சிற்றறிவு, இவன் அறிவு. எனவேதான் கைத்தோணிக் கொண்டு அக் கடலைக் கடக்க முயல்கின்றான்.


சிற்றறிவு. இவன் அறிவு. எனவேதான் கைத்தோணி என்கிறார் தாயுமானவர்.

பேரறிவு, பேராற்றல், இயல்பூக்கம், காலம் நான்கும்தான் இறைவனின் நிலை. அதனால்தான் "வாலறிவன்" எனப் பேசுகின்றார் திருவள்ளுவர்.

இறைவன் தாள் அணையைப் புணையாகப் பற்றாத, அறிவைத் துணைக்கொண்டு கடக்க முயலும்போது, "நான்" "எனது" என்ற ஆணவச் செருக்காகிய சுறாமீனால் அலைக்கழிக்கப் படுகின்றனர்.

-----------------------------------------------------------------------------------------------------------------

இந்தச் செருக்கை அறுப்பவனே வானோர் உலகம் புகுவான்




என்பது வள்ளுவம்.

இன்றும் மலையாளத்தில், ஒருவரைப் பற்றிக் கேட்கும் போது "இத்தேகம் யாராணு?" என்றுதான் வினவுகின்றார்கள். அதினுள் பெரிய தத்துவம் அடஙகியிருப்பதை நாம் உணரலாம்.

கடல் அலைபோல் ஒன்றிற்குப் பின் ஒன்றாகப் பல வினைகளை மனிதன் செய்து கொண்டிருக்கின்றான்.

அலை அலையாகப் பெருகி வரும் இந்த வினைகள் அவனை அலைக்கழிக்கின்றன.

இதனைக் கருத்தில் கொண்டுதான் "சும்மா இருப்பதே சுகம்" எனப் பேசினார் தாயுமானவர்.

அலை எழும் அந்தக் கடலில் புயல் காற்று வேறு வீசத் தோணியைக் கவிழ்க்க முயல்கின்றது.

மடந்தையர் மயலாகிய சுழல்கற்று அமைதியான வாழ்க்கையைக் கவிழ்க்கும் சூறாவளி.

சீரான காற்றில் நேராகச் சென்ற சிற்றறிவுத் தோணி திசை திரும்பிச் சுழல்கின்றது.

அத்தனைத் துன்பங்கள் போதாது என்பது போல் ஆசைக் கான்யாறும் வான்நதி சுரத்தல் போல் ஓயாது சுரந்து வாழ்வுக் கடலில் கலந்து கலக்குகின்றது.

தோணி அலைகின்றது. இந்த நிலையில் தோணியைச் செலுத்தும் மூதறிவும் தம்மைக் கைவிட, அதனால் மதி மயங்க வாடுகின்றார்.

உதவியற்ற அந்த நிலையில் பெருந் துன்பமாகக் கடற்கொள்ளைக் காரர்களாம் காலன் (இறப்பு) அந்தத் தோணியைக் கவிழ்க்கப் - பாழாக்க வருவர் என்ற அச்சத்தால் கண்ணீர் சோர ஏங்குகின்றார்.

முத்தியாம் முழு நிலைக் கரையை அடைய நீ கருணை செய் வேண்டுமென்று இறைவனைக் கேட்கின்றார்.

அதுவும், தம் சித்தத்தில் உறைகின்ற அறிவான தெய்வத்தையே வேண்டுகின்றார்.

கடல் - பிறவி, அலை -வினை போன்ற கற்பனைகள் பழமையானவை என்றாலும் அவற்றைத் தாயுமானவர் தொகுத்துக் கூறும் நயத்திலும் ஓசையிலும் தனி இன்பத்தைப் பெறுகிறோம்.



இப்பிறவி என்னும் ஓர் இருள்கடலில் மூழ்கி,நான்
என்னும் ஒரு மகரவாய்ப்பட்டு,

---

இருவினை எனும் திரையின் எற்றுண்டு, புற்புதம்
எனக்கொங்கை வரிசைகாட்டும்

துப்புஇதழ் மடந்தையர் மயல்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்து அடிப்பச்
சோராத ஆசையாம் கான்ஆறு வான்நதி
சுரந்ததுஎன மேலும்ஆர்ப்பக்,

கைப்பரிசு காரர்போல் அறிவு ஆன வங்கமும்
கைவிட்டு மதிமயங்கிக்,
கள்ளவங் கக்காலர் வருவர் என்று அஞ்சியே
கண்அருவி காட்டும்எளியேன்,

செப்பரிய முக்தியாங் கரைசேர வும்கருணை
செய்வையோ? சத்து ஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே!
தேசோ மயானந்தமே. . (தேசோ மயானந்தம். 2.)

திருச்சதக பாட்டு

இங்கு மாணிக்கவாசகரின் திருச்சதக பாட்டு நாம் நினைவுக்கு வருகிறது. (திருச்சதகம்.27)

“தனியனேன் பெரும்பிறவிப் பௌவந்து எவ்வத்

தடந்திரையால் எற்றுண்டு பற்றுஒன்று இன்றிக்

---

கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்

கலக்குண்டு காமவான் கறையின் வாய்ப்பட்டு

இனிஎன்னே உய்யுமாறு என்றுஎன்று எண்ணி

அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை

முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லல்

கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

துணை ஏதும் கிடைக்கப்பெறாத நான் பிறவிப் பெருங்கடலில தந்தளிக்கிறேன். துன்பம் என்னும் பேரலை வந்து மோதுகிறது.

மாதர் மயக்கம் என்னும் காற்று வீசி என் மனதைக் கலக்குகிறது. ஆசை என்னும் சுறாமீன் என்னை விழுங்க வருகிறது.

இனி உய்யும் வகை யாது என்று பலவாறு எண்ணுகிறேன். இந்த நெருக்கடியில் பஞ்சாட்சமாகிய நமசிவாய என்னும் மரக்கலம், முதல்வா, உனது அருளால் கிடைக்கிறது.


அறிவிலயாகி என்னை நீ முக்தி என்னும் சாசுவதமான பெரு நிலத்தில் கொண்டு சேர்க்கிறாய்.

அற்ப வாழ்வு வாழ்கிற கடைத்தரமான மனிதனுக்குப் பஞ்சாட்சர ஜபம் பெரும் துணை புரிகிறது.

---

ஆசைகளினின்று அவனை விடுவித்து முக்தியின்கண் கொண்டு சேர்க்கிறது.

உலகப் பொருள்களிடத்து வைராக்கியத்தை உண்டு பண்ணுதற்கு இறைவனடைய நாமஜபம் சிறந்த சாதனமாகிறது என்பார் சுவாமி சித்பவானந்தர்.




எப்போதுமே துன்பம் வரும்போதுதான் மனிதன் இறைவனை மிகுதியும் நினைக்கின்றான். நாடுகின்றான்.

தானே தனக்குப் பகையாக அமைந்து துன்புற்றபோது வேறு வழியில் விடுதலை இல்லை என்று உணரும்போது இறைவனைத் தேடுகிறான்.

ம னிதனுக்கு உட்பகையாக அமைந்து, அவன் அடக்க அடக்க மீறி எழுவன புலன் உணர்வுகள்.

---

அவன் நல்லறிவு அவற்றை வேண்டாமென நீக்குகின்றதோ, நீக்கக் கூறுகின்றதோ அதனைக் கேளாது அவை செயல்படுகின்றன.

ஐம்பொறிகள் வாயிலாக இவை, இவ்வுணர்வுகளாம் வேடர்கள் உள் நுழைந்து. உட்பகை உருவாக்குவதோடு நின்று விடாது, தம் சேர்க்கையால் நன்மனத்தையும் தீயதாக்கித் தீமை விளைக்கின்றன.

மனத்தைக் காமத்தீயில் வெந்து கருகச் செய்கின்றன. உடலை உயிரோடு உண்கின்றன.

இந்நிலையில் உட்பகையை அழிக்க இயலாத சிந்தை, அறிவு நைந்து உருகி இறைவனிடம் முறையிடுகின்றது.

தாயில்லாச் சேய்போல் அலைந்து அலைப்பட்ட தன்னைத் தாயினும் கருணை காட்டி மீட்கும்படி வேண்டுகின்றது.

அறிவையும், பேரறிவாம் இறைவனையும் துணைக் கொள்ளாத புலன் வழிச சென்று காமத் தீயில் கருகும் மனித வாழ்வையும், அதன் இழிநிலையும், ஈடேற வேண்டிய தேவையும், அற்குரிய வழியும் கற்பனை நயம்படத் தரப்படுகின்றது.

வாயிலர் ஓர் ஐந்தில் புலன்எனும் வேடர்
    வந்து எனை ஈர்த்து வெம் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடும் தின்னச்
    சிந்தைநைந்து உருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்து அலைப் பட்டேன்
    தாயினும் கருணையா மன்றுள்

நாயகம் ஆகி ஒளிவிடும் ணியே
  நாதனே ஞானவா ரிதியே.   ( சிவன் செயல்.5)

மனதை மாசுறச் செய்யும் இத்தகு புலனுணர்வின் இழிநிலைகளைப் பல்விடத்தில் தாயுமானவர் எடுத்துக் காட்டுகின்றார்.

இந்நிலைக்க ஒருவரை வீழச் செய்யும் பொருட்டு பெண்டிரின் தன்மையைச் - செயலைக் கற்பனை நயம்படச் சுட்டுகின்றார்.

நெஞ்சம், பறவை போன்றது. சதந்திரப் பறவை, உடலாகிய கூட்டிற்குள் அ்து எப்போதும் கட்டுண்டு இருப்பதில்லை.

எண்ணச் சிறகுகளை விரித்து எதிர்ப்புக்களாம் எதிர்க் காற்றைப் பொருட்படுத்தாது, தன் தண்மை இழக்காது மேலே மேலே செல்கின்றது.

உயிரின் உயர்நிலையில் இறைவன் திருபாதப்படிகளைப் பற்றி முன்னேறுகின்றது. அந்த நேரத்தில் அதற்கு தன்னிலை பற்றிய இறுமாப்பு எழுகின்றது.

சரி, நாம் கடந்து வந்த தூரம்தான் என்ன? பறந்து வந்த உயரம் தான் எத்துணை எனப் பார்க்க விழைகின்றது.

திரும்பிப் பாக்கின்றது. கீழ்நோக்கி நோட்டம் விடுகின்றது. பெருமையோடு, அங்கே, நிலத்தில் பல மைல் தூரங்கட்கு அப்புறம் அதன் கண்களையும் கருத்தினையும் கவரும் நிலையில் ஒரு கவின் காடு தென்படுகிறது.

---

காட்டின் பசுமையில் பார்வை சிக்க, அங்குக் கிடைக்கக் கூடிய கனிகளில் கருத்துச் செல்ல, அவற்றின் இனிமையில் ஊற நா நினைக்க, வேகம் குறைகிறது.

குறிக்கோளை நோக்கிச் சென்ற திண்மை குலைகிறது. உயர்வு நீங்கிக் கீழ்நோக்கி வருகின்றது.

காட்டை அடைகின்றது. ஆனால், அந்தோ? அது விரும்பிய கனியோ, விழைந்த இனிமையோ கிடைக்கவில்லை. மறைந்திருந்த கண்ணியில் மட்டிக் கொள்கின்றது.

திண்ணிய நெஞ்சப் பறவை சிக்கக் குழல்காட்டில்

கண்ணி வைப்போர் மாயம் கடக்குநாள் எந்நாளோ? (மாதர் மயக்கு அறுத்தல்.பா.1127)

காமத்தைக் கள்ளோடு ஒப்பிடுவது மரபு. ஆரவன்பு என்னும் உயர் பொருள் நிலையில் காமத்தைக் கள்ளினும் சிறந்ததாகக் காட்டினார் திருவள்ளுவர்.

காம வேட்கையை மதுவாகத் , தீதுபயக்கும் கள்ளாகக் கண்டார் தாயுமானவர்.

ஒரு கட்கடை (கள் - கடை) . அக்கடையைச் சூழ்ந்து நிற்கின்றனர் கள்ளுண்ண விரும்பும் மக்களுக்கு, அக்கடையில் ஊழியம் செய்யும் தொண்டியர் மதுவை மொண்டு மொண்டு கொடுக்கின்றன்ர்.

கொடுக்கும்போது, மதுவால் மயங்கும் முன்தம் மொழியால் மங்குவதற்குப் போலும் இன்மொழிகள் பேசுகின்றனர்.

---

குழைந்து குழைந்து பேசும் அவர்களின் குளறல்கள், அவர்களே மதி (மது) மயங்கியுள்ளனரோ என எண்ணச் செய்யலாம்.

பேச்சின் தன்மையாலும், கொஞ்சும் இனிமையாலும் கண்ணின் கடைப்பகுதி (கட் கடை-கண் கடை, கடைவிழி) வெளியிடும் அன்பு உணர்வாலும், தன்னை நீங்காது சுழல்வோர்க்குக் வேட்கையை மொண்டளிக்கும் பொருட்டு பெண்டிரின் காட்சி இத்தகு கற்பனை ஒன்றைக் கவிஞர்க்ககுத் தூண்டிற்றுப் போலும்.

"விண்டு மொழிகுளறி வேட்கைமது மொண்டுதரும்

தொண்டியர்கள் கண்கடையின் சுற்றுஒழிவது எந்நாளோ? மாதர் மயக்கு அறுத்தல்.பா.1140)

இத்தகு தொல்லைகளினின்று நீங்க, விடுதலை பெற இறைப் பூசை இன்றியமையாதது ஆகின்றது.

சாதாரண பூசை அன்று. சதா காலப் பூசை. துட்ட தேவதையை நீக்க வேண்டும். அதற்குப் பலி கொடுத்து விடக் கூடாது.

சாந்த தேவதைக்கே மறியைப் பலியிட்டுக் கொடுக்க வேண்டும். பலிக்கு மறி தவிர அபிடேக நீர் வேண்டும்.

நைவேத்தியம் வேண்டும். தூபம் தேவை. தீபம் தேவை. புறப் பூசையின் தேவையைத் தாயுமானவர் கருதினார் போலும்.

மனமே பலியாக, கர்மம் விலக்கப் படவேண்டிய துட்ட தேவதையாக, இறைவனே சாந்த தேவதையாக, அன்பே அபிடேக நீராக, ஆவியே நைவேத்தியமாக, ப்ராணன் தூபமும் மதி தீபமுமாக,

சதாகால்பூசை- அகப் பூசை நிழும் நிலையில் தாயுமானவர் நம்படத் தருகிறார்.



துள்ளும் அறி யாமனது பலிகொடுத் தேன், கர்ம
    துஷ்ட தேவதைகள் இல்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
    தொழும்பன் அன்பு அபிஷேகநீர்.

உள் உறையில் என்ஆவி நைவேத்தி யம் ப்ராணன்
    ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலம் அன்றுஇது சதாகால பூஜையா
    ஒப்புவித் தேன். கருணைகூர்

தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
    தெளிந்த தேனேசீனியே
திவ்ய ரச ம் யாவும் திரண்டு ஒழுகு பாகே
    தெவிட்டாத ஆனந்தமே

------------------------------------------------------------------------------------------------------------------------

கள்ளன் அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
    கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையி ல் ஆனந்த நிர்த்தமிடு
    கருணா கரக்கடவுளே. (கருணா கரக்கடவுளே. 8.)





# 5.தாயுமானவரின் தொடர் ஆட்சி

---

ஒரு கவிதையின் நடை என்பது அக்கவிதையில் பயன்படுத்தப்படும் மொழி அலகு வகைகளின் தேர்வு மற்றும் வரிசைப்பாடு என்பவற்றின் மூலம் நிர்ணயிக்கப்படும் என்பார்கள்.

பெரும்பாலும் கவிதை என்ற கட்டமைப்பின் உள்ளே வருகின்ற தொடர்களும், சொற்களும் சிரமமான முறையில் ஒற்றுமையையும், வேற்றுமையையும், வெளிப்படுத்துகின்றன.

கவிதை உரைக்கோவையை ஆய்கின்றவர்கள் தொடர்கள் மற்றும் சொற்களின் “மறுடித் தோன்றல்” என்ற தன்மையை கவிதை நடையை விளக்குவதற்காகப் பயன்படுத்துவர்.

தாயுமனவரின் சில கவிதைகளில், சில தொடர்களும் அடிகளும் அடிக்கடி தோன்றுகின்றன.

இத்தகைய கூறுகள் கவிதையைப் படிப்போர் கவிதையின் மையக் கருத்திலிருந்து விலகாமலிருப்பதற்காக் கவிதையினுள் புகுத்தப்படுகின்றன.

- ஆதிகாலத்தில் எனை (தா.பா.881)
- ஆதிக்கம் நல்கினவர் (தா.பா.39)
- ஆதிப்பரானேஎன் (தா.பா.1362)
- ஆதிஅந்தம் காட்டாது (தா.பா.1090)
- ஆதிஅந்தம் காட்டாத (தா.பா.24)
- ஆதிஅந்தம் காட்டாமல்(தா.பா.1179)
- ஆதி அந்தம்நீ (தா.பா.875)
- ஆதிஅந்தம இல்லாஅரிய (தா.பா.1265)
- ஆதி அந்தம் இல்லாத (தா.பா.1219)

---

- உடல் பொருள் ஆவி மூன்றும் (ஆகார.18)
- உடல் பொருளும் யானும் (தன்னை.10)
- உடல் பொய் உறவு ஆயின் (உடல்.1)
- உடல்குழைய (தா.பா.55)

- பொய் ஆன தன்மை விளங்கினால்(உடல்.3)
- பொய்ஆன தன்மை பொருந்துமோ? (உடல்.3)
- பொய்ஆம் பிறப்பு இறப்புப் போம் (உடல்.8)
- பொய்கண்டார் (தா.பா.1097)
- பொய்குவித்த (தா.பா.937)
- பொய்க்காட்சி (தா.பா.1178)
- பொய்க்கூடுகொண்டு (தா.பா.1066)
- பொய்திகழும் (தா.பா.61)
- பொய்ப்பணி (தா.பா.1067)
- பொய்ம்முடங்கும் (தா.பா.1242)
- பொய்ம்மயமே (தா.பா.1354)
- பொய்அகல மெய் (தா.பா.1042)
- பொய்யன்இவன் (தா.பா.650)
- பொய்ஆர்உலகம் (தா.பா.419)
- பொய்யினேன் (தா.பா.74)
- பொய்உணர்வாய் (தா.பா.1024)
- பொய்உலகவாழ்க்கை (தா.பா.820)
- பொய்உலகும் பொய் (தா.பா.1320)
- பொய்எல்லாம் (தா.பா.813)

- **பொய்என்று அறிந்தும் (தா.பா.1328)**
- **பொய்யைப்போய் (தா.பா.740)**
- மௌனத்தின் வைப்பு (**திருவருள்**.2)

ஒரே தொடரைத் திரும்பக் கூறல்

1. பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கம் அறநிறைகின்ற பரிபூர ணானந்தமே.
2. "சிரகிரி விளங்க வரு தஷிணா மூர்த்தியே!

   சின்மயானந்த குருவே"
3. "மந்தரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்

   மரமபில்வரு மௌனகுருவே"
4. "கருத்தரிய சிற்சபையில் ஆனந்த நிர்த்தமிடு

   கருணா கரக்கடவுளே!
5. "வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற

   வித்தகச் சித்தர்கணமே!"
6. "அண்டபகி ரண்டமும் அடங்கஒரு நிறைவுஆகி

   ஆனந்தம் ஆனபரமே!"
7. "சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்

   ஜோதியே சுகவாரியே!"

8. “இகபரம் இரண்டினிலும் உயிரினும் உயிர்ஆகி

எங்கும்நிறை கின்ற பொருளே!”

9. “சித்தமிசை குடிகொண்ட அறிவுஆன தெய்வம்!

தேஜோ மயானந்தமே!”

10. “தெரிவதற்கு அரிய பிரமேஅமல

சிற்சு கோதய விலாசமே!”

11. “வரைரா ஜனுக்கு இருகண் மணியாய் உதித்த

மலைவளர்க்காத லிப்பெண் உமையே!”



---

# 6. தாயுமானவர் பாடல்களில் உவமைகள்

உவமைகளைக் கையாள்வதில்- காளிதாசனைப் போல் தாயுமானவரும் ஆற்றல் மிக்க கவிதைகளைப் புனைந்துள்ளார்.

இலக்கியம், படித்தவர் மட்டும் படிப்பதாக இருந்தாலும் எல்லோரும் பயன் அடைய முடியாது. கற்றோரே பயன் பெறுவர்.

தம் கருத்துக்களைப் பொது மக்களும் எளிய நிலையில் புரிந்து கெள்வதற்கு என தாயுமானவர் கூறும் உவமைகளும் பழமொழிகளும் எண்ணத்தக்கன.

படிப்பவர், கேட்பவர் மனங்களில் கருத்துகள் பசுமரத்தாணி போல் பதிவதற்கு உவமைகள் சிறப்பாகப் பயன்படுகின்றன.

எந்த ஒரு பொருளைப் பாட ஆரம்பித்தாலும் உவமை அழகு மிளிர விளங்குனின்றார் தாயுமானவர்.

உலக வழக்கில் இருக்கிற, தினசரி காணுகின்ற பொருட்களைக் கொண்டு செய்திகளைத் தெரிவிப்பது நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் வகையில் அமைந்துள்ளது.

## நெஞ்சில் மாணிக்கமாக

இறைவன், அன்பர் நெஞ்சில் மாணிக்கமாக வாழ்கின்றான். ஒளி வீசும் மணியாகிய அவனுக்கு, அவனைப் பெருமையோடு வைத்துக் கொள்ளும் ஒரு பேழை நெஞ்சம் - மாசற்ற அன்பு நெஞ்சம் வேண்டும்.

“மாற்ற அன்பர் நெஞ்சே மாறா பெட்டகமாக்

சுற்ற மாமணிநின் தேசினையும் காண்பேனோ?”

பேறுநிலையில் பேழையாக மாறும் நெஞ்சத்தின் பாழ்த்த நிலைகளை, நினைவுகளை பல நிலையில் விளக்குகின்றார் தாயுமானவர்.

பரம சுகநிட்டை பெறாத மனம் சஞ்சலப்படுகின்றது. அதன் சஞ்சலத்தைப் பாதரசம் அனுபவிக்கும் சலனமாக, அங்கென்று தங்கி நிற்கும் நிலையின்றி சிற்றசைவால் அலைக்கப்படும் அலை கழிப்பாகக் காணல் ஏற்புடையதே (பரிபூரண.6)

- பேய்மனது (சச்சி.17)
- துள்ளும் அறியா மனது (கருணா.8)

என அடைநிலையால் உணர்த்தப்படுவதும் இத் தன்மையே.

- பெருங்காற்றில் அலையும் பஞ்சும் வாலறந்த பட்டமும்

ஆசை என்னும் பெருங்காற்றில் அலையும் பஞ்சு என்பதும் இத்தன்மையினையே விளக்குகின்றது.

“ஆசைஎனும் பெருங்காற்றூடு இலவம்பஞ்சு

எனவும் மனது அலையும் காலம்.................” ( (ஆசை )

பஞ்சாய்ப் பறக்கும் நெஞ்சம் பாவியை நீ கூவியையா

அஞ்சாதே என்று நின் அருள் செயலும் காண்பேனோ?" (காண்.2)

ஆதாரமற்று அலையும் இந்த நிலையை வாலறுந்த பட்டமும், விரைவிழக்கும் பம்பரமும் ஆகிய மிகச் சாதாரணமாகப் பொதுக் காட்டுக்களால் விளக்குகின்றார் தாயுமானவர்.



ஒழுங்காக உருவாக்கப்பட்ட பட்டம், காற்று வீசி அடிக்கும் போதும் உயர்ந்து எழுந்து மேல் நோக்கிச் செல்கின்றது.

ஆயின் அதன் வால் அக் காற்றில் சிக்கி அறும்போது பட்டம் செயல் இழக்கின்றது.

வாலற்ற பட்டம் பறக்க இயலாது. மனம் என்னும் பட்டம் "வால்" உடையதாகத் தூய்மை பொருந்தியதாக இருக்கும் போதுதான், இறையை நாடி உயர முடியும்.



மாயை ஆகிய திரை விழும் போது தூய்மை கெடுகின்றது. வாலற்ற பட்டத்தின் நிலைக்கு இழிகின்றது. அந்த நிலையில் உயிர் உயர்ந்து இறையை அடையும் நிலை கிட்டாது கழிகின்றது.

"வாலற்ற பட்டம் என மாயா மனப்படலம்

காலற்று வீழவும் முக்கண்ணுடையாய் காண்பேனா?" (காண்.7.)

இப்பாடலைப் பிறிதோர் நிலையிலும் பார்க்கலாம். வால் பொருந்திய பட்டம் வான் மண்டத்தில் காற்றுப்பட்டு அலைகின்றது.

வால் ஆகிய வினைத் தொடர்பால் ஏற்பட்ட நிலை இது. மாயை என்னும் மனத்திரையே இங்குக் காற்றாக கற்பிக்கப் படுகின்றது.

மாயை நீங்கியதும், காற்று அற்றதும் (இல்லாதது நீங்கியதும்), வாலற்ற நிலையால் பட்டம் கீழே விழுகின்றது. அதன் அலைதல் தீர்கின்றது. இறைஅடியை அடைகின்றது.

பட்டத்தின் அலைதல் போன்றே காற்றாடியின் சுற்றலும் பம்பரத்தின் சுழற்சியும்,மனச் சுழற்சியைக் காட்டுதல் இயல்பு.

"ஆடிய கறங்குபோல் ஓடிஉழல் சிந்தை" (சித்தர்7)

எனவும்

"ஆடு கறங்கு ஆகி அலமந்து உழன்று மனம்

வாடும்எனை ஐயா நீ வாஎனவும் காண்பேனோ. (காண்.22)

எனவும் விவரிக்கப்படுகின்றன.

## ஆடும் மனப்பாம்பு

இச் சுழற்சி அகல இறையையே வேண்டல் இயல்பு. எனவே சுழற்சி ஓய்ந்த கறங்காகச் சஞ்சலமின்றி ஓய்ந்த மனம் சித்திரிக்கப் படுகின்றது.

அந்த நிலையில் கறங்கு அசையா நிலை பெறுவது போல் மனமும் இறைவனடி அடைகிறது.



“ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை

அடங்கி மனம்வீட.................. (தேஜோ.4)

ஆடி ஓயும் மனத்தின் மன் நிலையை இதே நிலையில் பாம்பின் ஆட்டத்தோடும் உவமிக்கின்றார் தாயுமானவர்.

“வாதனையோடு ஆடும் மனப்பாம்பு மாஒரு

போதனை தந்து ஐயா புலப்படுத்த வேண்டாவோ” (வேண்டாவோ.2)

இதே நிலையில் குரங்கின் நிலை இல்லாத தாவலுக்கும், அது தன்னிலை இழந்து செய்யும் அட்டூழியங்களுக்கும் ஒத்து அமைவது மனத்தின் தன்மைகள் - பண்புகள் என்பதும் சிறப்பிக்கப்படுகின்றன.

## மனக்குரங்கு

இதே நிலையில் குரங்கின் நிலையில்லாத் தாவலுக்கும், அது தன்னிலை இழந்து செய்யும் அட்டூழியங்களுக்கும் ஒத்து அமைவது மனத்தின் தன்மைகள் - பண்புகள் என்பதும் சிறப்பிக்கப்படுகின்றன.



“பொறியில் செறியைம்  புலக்கனியைப்

புந்திக் கவரால் புகுந்துஇழுத்து

மறுகிச் சுழலும் மனக்குரங்கு

மாள வாளா இருப்பேனோ? (**ஆசை**.13)

எனவும்,

“பொல்லாத மாமர்க்கட் மனமே எனைப்போல் எடுத்த
எல்லா வற்றையும் பற்றிக் கொண்டனையே” (பாயப்.49)

எனவும்

“காடும் கரையும் மனக்குரங்கு கால்விட்டு ஓட அதன் பிறகே
ஓடுந் தொழிலால் பயனுளதோ.......” (காடும்.1)

எனவும்

“கூறாய ஐம்பூதச் சுமையைத் தாங்கிக்
குணம்இலா மனம்எனும் பேய்க் குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழல என்னை
வைத்தனையே பரம. நின் மகிமை நன்றே!” (கல்ஆலின்4)

எனவும்

““மதமான வானரக்கைகம் தன்மைவிட்டே அண்ணலிடத்து
ஓவியம் போல் நிகின் என உள்ளுவரோ?” (பைங்கிள்.28)

எனவும்

“மனம் ஆன வானரக்கைகம் மாலை ஆகாமல்
எனைஆள் அடிகள்அடி எய்துநாள் எந்நாளோ?”(எந்.தத்து.5)

எனவும்

பல இடங்களில் வருகின்றமை புலவரின் ஒருமனப்பட்ட கருத்து விளக்கத்திற்குச் சான்று பகர்கின்றது.

## மதயானை போன்ற மனம்

அஃறிணைப் பொருட்களில், உயிரற்றனவான பாதரசம், பம்பரம், பட்டம் என்பனவும், உயிருள்ளவையான மறி, பாம்பு, யானை போன்றனவும் இவரால் பய்ன்படுத்தப் படுகின்றன.



" வட்ட ம் இடடுஒளிர்பி ராண வாயுவு எனும்
நிகள மோடுகம னம்செயும்
மனம் எ னும் பெரிய மத்த யானையை என்
வசம் அ டக்கிடின், மும் மண்டலத்து

இஷ்டம் உ ற்றவள ராஜயோகம் இவன்

---

யோகம் என்று அறிஞர் புகழவே
ஏழையேன் உலகில் நீடு வாழ்வன்.இனி
இங்கி இதற்கும் அனு மானமோ?

பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்யம் ஆனசுப யோகமும்,
பார காவிய கவித்வம் நான்மறை
பராய ணம்செய்மதி யூகமும்,

அஷ்ட சித்தியும் நல் அன்ப ருக்குஅருள
விருது கட்டியபொன் அன்னமே!
அண்ட கோடிபுகழ் காவை வாழும்அகி
லாண்ட நாயகிஎன் அம்மையே. (அகிலாண்டநாயகி 1.)

என்னும் ஓரிடத்தே கட்டுப்பாடற்ற நிலையும் - மதயானை மனத்திற்கு உவமையாகி வருகின்றது.

## மல்லர் போல் கூத்தாடும் மனம்

மன இயல்பின் இத்தகு விளக்கங்கள் தனி உவமை வாயிலாகத் தரப்படுவதோடு அதன் பல செயல்களின் படி நிலைகள் தொகுத்து அளிக்கப்படலும் அருகித் தாயுமானவரிடம் காணப்படுகின்றது.

எதிர்வாதம் செய்து மல்லர் போல் கூத்தாடும் அதன் இயல்பும், சூதாடுவோர் போல் வாதாடும் அதன் தன்மையும், தேள் கொட்டிய குரங்குபோல் துள்ளும் அதன் பண்பும் தொடர்ந்து வரும் முக் கண்ணிகளில் அமைக்கப்படுகின்றன.

“வாதுக்கு வந்து எதிர்ந்த மலரைப்போல் பாழ்த்த மனம்
ஏதுக்குக் கூத்தாடு எந்தாய் பராபரமே! (பராபர.180)

“சூதாடு வார்போல் துவண்டு துவண்டு மனம்
வாதாடி என்ன பலன் வாய்க்கும் பராபரமே.” (பராபர.71)

கொள்ளித்தேன் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்
கள்ள மனம் துள்ளுவது என் கண்டாய் பராபரமே. (பராபர.72)

முதல் உவமை “மனமே…வாதுக்கு வந்து எதிர்ந்த மல்லரைப் போல் வாதாடினாயே என “உடல்பொய்யுறவு” என்ற பகுதியல் ஐந்தாவது பாட்டிலும் வருகிறது.

“எதுக்குச் சும்மா இரு. மனமே! என்று உனக்குப்
போதித்த உண்மை எங்கே போகவிட்டாய்? - வாதுக்கு
வந்து எதிர்த்த மல்ரைப் போல் வாதாடி னாயே. உன்
புந்திஎன்ன? போதம் என்ன? போ.” (உடல்.5)

ஒரு கருத்தை அதே உவமையால் தாயுமானவர் வலியுறுத்துவன் காரணம் என்ன?

---

சாதகனுக்கு அவனுடைய மனதை அறிந்து கொள்ள - புரிந்து கொள்ள -கட்டுப்படுத்த அதே உவமையை பல இடங்களில் தருகிறார் தாயுமானவர்.

## வன் நெஞ்சோ? மரநெஞ்சோ? இரும்பு நெஞ்சோ?

- எளிதில் மாற்ற இயலாத இந்த மனத்தின் இயல்புகளாற் போலும், அவற்றின் கொள் கலமான மனம் செப்பனிடப்பட வேண்டிய பூமியாக (ஆனந்.6).
- ஒரு காலத்தும் உருகாத கல்நெஞ்சாக (சுகவாரி.3)
- கல் நெஞ்சாக (உடல். 40)
- பாதகக் கருங்கல் மனமாக (எனக்கென்.21)
- மரப் பான்மை நெஞ்சாக (ஆசை.2)

உருவாக்கபபடுகின்றது.

தன் மனதின் இத்தகு இழி நிலையை - இயல்பை எண்ணி, அதை இன்னதென்று விளக்குவது என ஐயுற்றுப் போலும் சில இடங்களில் ஒரே அமைப்புடைய ஐய உவமைகளைத் தாயுமானவர் பயன் கொள்கின்றார்.

- இரும்போ கல்லோ மரமோ வென்னிதய மியாதென்றறியேன். (தன்னை3)
- இரும்போ கல்லோ மரமோ என்னும் நெஞ்சை ( நினைவோன் 8)

  எனவும்

---

வன்நெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ
இருப்பு நெஞ்சோ வைரம் ஆன
கல்நெஞ்சோ, அலது மண்ணாங்கட்டி நெஞ்சோ,
எனது நெஞ்சம் கருதில் றானே." (**ஆசை**. 4)

"இரக்கமோடு பொறை, ஈதல், அறிவு, ஆ சாரம்
இல்லேன்நான். நல்லோர்கள் ஈட்டம கண்டால்
கரக்கும்இயல்பு உடையேன். பாழ் நெஞ்சம் எந்தாய்!
கருந்தாதோ? வல்உருக்கோ? கரிய கல்லோ? (**கல்ஆலின்**.30)

உவமிக்கப்படும் நெஞ்சம், இறைத்தொடர்பு கொள் பக்குவம் பெறும்போது மென் நெஞ்சமாக மாறி விடுகின்றது. அதன் அதத்மையினை அனலிட்ட மெழுகுக்கு ஒப்பிடுகின்றார் தாயுமானவர்.

"நீஉண்டு நினைச் சரண்புக நான்உண்டு என் நெஞ்சு அமையா
தீஉண் டிருந்த மெழுகலவோ கதி சேர்வதற்கே" (பாயப்21)



“தாயினும் நல்ல தயாளுவே நின்னைஉன்னித்

தீயின் மெழுகு ஒத்து உருகுஞ் சிந்தைவரக் காண்பேனா? “(காண்.15)

இந்த உளப்பக்குவ நிலையில் இறைக்காதல் வேண்டும் தலைவியாக - பிரிவுக்கு அஞ்சும் பேதையாக நிற்கும் தாயுமானவர், பிரிவு நேர்ந்தால் நெஞ்சம் என்ன வருத்துமோ என அலமந்து அந் நிலைக்கு இதே உவமையை தருகிறார்.

“ஓகோ உனப் பிரிந்தார் உள்ளம் கனலில்வைத்த

பாகோ மெழுகோ பகராய் பராபரமே” (பரா.30)

இத்தகு நெஞ்சகத்தில் எழும் சிந்தைகளை விளக்க வரும் தாயுமானவரின் உவமை சிந்தனைக்கு உரியது.

“நீர்க்குமிழி போல் நினைவுவெளி கரையப்

- சிந்தைத் துயர் என்றோரு பாவி சினந்து சினந்து போர் முயங்க (தன்னை.7)

எனவும் அதனைப் பாவி எனக் கூறுவதோடு, அதனின்று தான் விடபெற வேண்டுமிடத்துப் பிற உவமைகளையும கையாளுகின்றார்.

- கள்ள நினைவுகளுடைய அம்மனம் (பரா.21...275)

மாம்பழத்து வண்டுபோல் உள்ளே இருந்து கொண்டே உயிருக்கு ஊறுகள் செய்வதனால் போலும் அதனை “மனமான கிருமி” என்ற உவமையால் விளக்குகின்றார் தாயுமானவர்.

இத்தகைய நினைவுகள் நீங்கினால் மனம் துய்மை அடையும், உயிர் ஈடேறும்.

“நீர்புற் புதமாய் நினைவு அருட்கே நின்று அழியப்

பார்ப்பது அல்லால் வேறும்ஒன்றைப் பாரேன் பராபரமே (பரா.203)

“நீர்க்குமிழி போல் என் நினைவுவெளி யாய்க்கரையப்

பார்க்கும் இடம் எல்லாம் என் பார்வை பராபரமே” (பரா.204)

“பட்டப் பகல்போலப் பாழத்தசிந்தை மாளின்எல்லாம்

வெட்டவெளி ஆக விளங்கும் பராபரமே.” (பரா.362)

“பார்க்கின் அணுப் போல்கிடந்த பாழ்ஞ்சிந்தை மாளின்என்னை

யார்க்குச் சரிஇடலாம் ஐயா பராபரமே.” (பரா.363)

இத்தகு மனச் சுழற்சியைக் - கவலையில் உழலும் மன நிலையை

- வாயில் கும்பம் போல் கிடந்து புரள்வேன் (ஆகார.25)

என்கிறார்.

இவ்வாறு சிந்தைச் சுழற்சி கலைந்து மனம் தூயதாகி இறையுடன் கலக்கும் நிலையைக் கற்பூர உண்டை தீயினில் கலந்து ஒன்றாவதற்கு இணையாகக் கருதகின்றார் தாயுமானவர்.

“உன்னும்மனம் கர்ப்பூரஉண்டைபோ லேகரைய

மின்னும்ஆ னந்த விளக்கே பராபரமே” (பரா.259)

மனத்தையே இத்தகு பல உவமைகளால் விளக்குகின்றார் தாயுமானவர்.

வேறு எப்பொருளும் பருப்பொருளாயினும் சரி நுண்பொருளாயினும் சரி, இதுபோல் உவமை வழி பெரு விளக்கம் பெறவில்லை என்றால் அது பொருத்தமாகவே அமையும்.

மரபு வழி வந்தனவும் புதியனவும், உவமைகளாக இவரால் பயன்படுத்தப் பட்டுள்ளமையும் மேற்கண்ட பகுதிகளால் தெளிவு பெறுகின்றன.

## ஒன்பது வாசல் நடைமனை

மனதிற்கு இடமாகவும் கொள்கலமாகவும் அமைவது உடம்பு. அதனை விடக்குத் துருத்தியாகவும் கரு மருந்துக் கூடாகவும், சுடுகாடாகவும் கற்பனை நயம்பட விளக்கிய தாயுமானவர், சில உவமைகள் வழியாகவும் அதன் தன்மைகளை விளக்குகின்றார்.

மாலையாகப் பல உவமைகளைக் கூறி உடலின் இயல்புகளை விளக்குகின்றார் தாயுமானவர்.

தீநாற்றம் நிறைந்தது இந்த உடல். தன்னிடமிருந்தே தோன்றும் கழிவுப் பொருள்களால், அழுக்குகளால்தான் அது இந்த நிலைக்கு ஆகின்றது.

உள் அழுக்கும் உள்ளத்து அழுக்கும் வெளிப்படும் நிலையில் அதற்குள் அமைந்த வாசல்கள் ஒன்பது.

அந்நிலையாலும், வாயில்கள் பல இருந்தும் சலிக்கும் நிலையிருப்பதாலும் அது நடக்கின்ற ஒரு வீட்டை ஒத்து அமைகின்றது.

உள்ளதை உயர்த்திக் கொள்ளாமல் தான் மட்டும் வளரும் நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டு. உணவு உட்கொள்வதையே நோக்கமாக கொண்டுள்ள அதனைத் தாயுமானவர் வெறும் சோற்று பையாகக் காண்பது இயல்பே.

அதோடு மட்டுமேன்று. அது மும்மலமாகிய ஆணவம் கன்மம் மாயைகளை பல்லாண்டு காலமாக வைத்துக் காக்கும் பழம் பானையாகவும் தென்படுகிறது.

இன்னும் வேறு பால தீய இயல்புகளைப் போற்றிக் கொள்வதால் அது பல்பொருங்கள் வைத்துக் காக்கும் சரக்கைறையைப் பல கறைகளால் ஒத்திருக்கின்றது என்றும், வற்றாது ஓடும் ஆறுபோன்று வழியில் படுகின்ற பொருள்கள் அனைத்தையும் அழித்துவரும் பெருவெள்ளம் போன்று அமைகின்றது.

அவ்வுடலில் வினைகள், அது இயற்றும் செயல்கள். மனத்தை கிருமியாகப் பிறிதொரு இடத்தில் காட்டியவர், இங்கு, உடலைக் கிருமிகள் அடர்ந்து உழலும் சோறுக்கு குழியாகவும் காட்டுகின்றார்.

பாடலில் உவமைச் செறிவு - உவமை அடுக்கு, உடலின் தன்மையைப் பல கோணங்களிலிருந்து விளக்குகின்றது. அதில் முழுமை அமைகின்றது.

நாற்றச் சடலத்தை ஒன்பது வாசல் நடைமனையைச்
சோற்றுப் பசையினை, மும்மல பாண்டத் தொடக்கு அறையை
ஆற்றுப் பெருக்கு அன்ன கன்மப் பெருக்கை, அடர்கிருமிச்
சேற்றைத் துணைஎன்ற நாய்க்கும் உண் டோகதி சேர்வதுவே" (பாயப்புலி.18)

- இங்குப் பாண்டம் எனக் குறிக்கப்பட்ட இந்த உடல், பிற இடங்களில் தெளிவான உவமை நிலையில் உப்பிட்ட கலம் எனவும்,(மலைவளா்.6)
- நவ வாயில் பெற்ற பசுமட் கலம் எனவும் (பெரிய.1)

பேசப்படுகின்றது. அதோடு, அதுவே

- புன்புலால் மயிர்த்தோ னரம் பென்பு மொய்த்திடு புலைக் குடிலருவருப்பு எனவும் (சுவாரி.4)
- மும்மலச் சோறு எனவும் (எந்நாட். யாக்.8)
- சோற்றுத் துருத்தி (எந்நாட்.யாக்.11) எனவும்

பேசப்படுகின்றது.

- அதன் அழிவு விரைவாக நிழ்வதனால் போலும் நீர்க் குமிழியும் (பைங்.34)
- இந்திரி ஜாலமும் (எந்.யாக.7)
- அது வினைகளால் அலைக்கப்படுவதால் சுழலேறு காற்றினிடை அழறு பஞ்சும் (மலைவளர்.7)

அதற்கு உவமையாகின்றன.

---

மெய்யோ புற்றாகவும், குண்டலி சக்தி பாம்பாகவும் காட்டப் படலும் உண்டு. (எந்.அன்பு.4.)

இத்தகு பண்புகளை விளக்கும் நிலையில் ஓர் உடல் உவமை மாலையாக முன் சுட்டிய பாடல் போன்றே பிறிதொரு பாடலும் அமைகின்றது.

மண்கலத்தேகம் ஆன பொய்யை மெய் எனக்கருதி

இதன்கண் பண்புகள் விரிந்தும் உவமைகள் செறிந்தும் இலக்கிய நயம்பட அமைகின்றது.




காக மோடு கழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்.

---

காலிண்டுநவ வாசல் பெற்றுவளர்
காமவேள் நடன சாலையை

போகஆசைமுறி யிட்ட பெட்டியை. மும்
மலமி குந்து ஒழுகு கேணியை.
மொய்த்து வெம்கிருமி தத்து கும்பியை.
முடங்க லார்கிடை சரக்கினை.

மாக இந்த்ரதனு மின்னை யொத்திலக
வேதம் ஓதிய குலாலனார்
வனைய, வெய்யதடி கார ன் ஆனயமன்
வந்து அடிக்கம் ஒரு மண்கலத்

தேக ம் ஆனபொயை மெய் எனக்கருதி
ஐய வையமிசை வாடவோ?
தெரிவ தற்கு அரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே! - (சிற்சு கோதய விலாசம் 1.)

உயிர் நீங்கிய பின் வீழ்ந்து விடும் உடல். காகம் கழுகு நாய் நரிகட்டு உணவாகும் நிலையில் சிறிது பயனுடையது போலும்!

அது வரை அந்த உடல் பல உணவுப் பொருட்களை தின்று அழித்துக் கொண்டே இருக்கும்.

வெறும் சோற்றுத் துருத்திதான். இரு கால்களும் நவ வாயிலும் பெற்று உளவளர்ச்சி இன்றித் தான் மட்டும் வளர்ந்து கொண்டிருக்கும் அந்த உடம்பு.

அத்தகைய உடம்பு  காம எண்ணங்கள் கட்டின்றி எழும் நிலையில் காமவேள்  நடனம்புரியும் நடனசாலையாக் காட்சிப் படுத்தப்படுகின்றது.

பிறர் கண்களுக்குத் தென்படா வண்ணம் அறிய இயலா வண்ணம், மோக ஆசைகள் உள்ளே அடைக்கப் பட்டிருக்கும் பெட்டியாக உடல் அமைகின்றது.

மும்மல மிகுதியால் நிரம்பி நிறைந்து வழியும் நிலையில், கேணி அதற்குரிய பொருத்தமான உவமை.

அழுக்குகள் மிகுந்தால் கிருமிகள் பல்குவது இயல்பே அன்றோ? எனவே கிருமி தத்து கும்பியாகவும் சரக்கரையாகவும் உடலைக் காண்கின்றார்.

எமன் அடித்து உடைக்கும் மட் கலமக உவமித்தல் அனைத்திற்கும் முடியாக  அமைகிறது.

உயிர் உதறிவிட்டுச் செல்லும் இந்தஉடல் சட்டையாகவும் (காண்.32) வெளியிலிருந்து கண்ணிற்குத் தெரியும் வண்ணம் உள்ள, தூண்டுதல்கள் ஒன்றுமின்றிச் செயல்படு நிலையில் சாட்டையிலா பம்பரமாகத் தென்படுகின்றது.

"சாட்டையில்லாப் பரம்பரம் போல் ஆடும் சடசால

---

நாட்டமற வெந்தை சுத்த ஞானவெளி காண்பேனோ?" (காண்12.)

உலகையும், உடலையும், மனத்தையும் சாட்டையில்லா பம்பரமாகவும் இந்திர ஜாலமாகவும் காணபதில் மரபுப் பழமை - பொதுமை அமைகின்றது.

"இந்திரஜா லம், கனவு, கானலின் நீர்

எனஉலகம் எமக்குத் தோன்ற.

சந்த்தமும் சிறபரத்தால் அழியாத

தற்பரத்தைச் சார்ந்து வாழ்க!

புந்திமகிழ் உறநாளும் தடைஅறஆ

னந்தவெள்ளம் பொலிக! என்றே

வந்துஅருளும் குருமௌனி மலர்த்தாளை

அனுதினமும் வழுத்தல் செய்வாம். (பொருள்வணக்கம்.6)

"தந்தைதாய் மகவு மனை வாழ்க்கை யாக்கை

ஜகம்அனைத்தும்மௌனஅருள் தழைத்த போதே

இந்த்ரஜா லம், கனவு, கானல் நீராய்

இருந்ததுவே இவ்இயற்கை என்னே என்னே! (தந்தை.1)

என உலகம் நுண் பொருட்களால் விளக்கப்படுவது, அதனை முழுமையாக அறிய இயலாத நிலையால் போலும்.

## குணத்தை விளக்கும் உவமைகள்

தாயுமானவர் இவ்வாறு முழு நிலையில் உவமைகள் தருவதோடு, தனியாக அடை நிலையில் அளிப்பதும் உண்டு.

அதனோடு சிறுசிறு உவமை ஆட்சிகளால் பொருள் விளக்கப் பெறலும் உண்டு.

குணத்தைப் பேயாகக் (பரிபூர.1) கண்ட தாயுமானவர். அதன் பல இயல்புகளை தனிததனியே ஒன்றும் பலவும் உவமைகள் கூறி விளக்குகிறார்.

- உயிரைப் பிணித்து இறையை அடைவதைத் தடுக்கும பாசத்தைக் காடாகவும் (பரிபூ.1. சொலற்.3),
- பெருங்கடலாகவும் (பரிபூ.10)
- பிணக்கும் விலங்காகவும் (நினவொன்.4 ஆகாதோ.13)

காணுநிலை தெளிகின்றது. பாசத்தின் மூல காரணமான ஆசை, பேராசை, மோகம், வேட்கை, காமம் என்பன,

- சங்கிலியோடு (மௌன.1)

---

- வெள்ளத்தோடும் (கருணா.10)
- பெருங்காற் றோடும் (ஆசை.1)
- கடலோடும் (பரவை) (பாயப்.33. -பரா.307.-ஆகாதோ.12.- எங்கும்.10)
- பாழோடும் (எந். மாத.13)
- மதுவோடும் (எந்.மாத.14)
- விழலோடும் (ஆகாதோ.6)
- புலைத்தொழிலோடும் (எந்.தத்.13)
- தீயோடும் (ஆனந்.25.சிவன்.5)
- காற்றோடும் (தேஜோ.2)
- பெட்டகத்தோடும் (சிற்சு.1)

உவமிக்கப்பட்டுள்ளன.

- மனத்தை பிணக்கும் ஆணவம், அறிவற்ற கண்ணிலாக் குழவியைத் தாங்கிய கருவறை யாகவும் (சின்ம.6)
- ஆங்கார முளை எனவும் (மௌன.1)
- ஆங்காரமான குலவேட வெம்பேய் (மௌன.9) எனவும்
- காடாகவும் (ஆனந்.6)
- கல்லாகவும் (ஆனந்.6)
- பேயாகவும் (பரா.159)
- மத யானையாகவும் (எந்.தத்.9)

உவமிக்கப்பட்டுள்ளது.

## கன்மம் அல்லது வினை

---

மும்மலங்களில் பிறிதொன்றான கன்மம் அல்லது வினையைச் சிங்கத்துக் கொப்பாகக் கண்டு அதனை நீக்கவரும் முறையை, அச்சுறுத்தும் சிம்புளாகக் (எட்டு கால்களை உடைய



பறவை) காண்கின்றார் தாயுமானவர்.

“சிங்கத்தைஒத்த எனப் பாயவரும் வினையினைச்

சேதிக்க வரு சிலம்புளே....(கருணா.10)

மெய்யினைப் பஞ்சாக அலைய வைக்கும் சுழற் காற்றாகவும் (மலைவளர்.7) வேராகவும் (எந்.தத்.18) திரையாகவும் (தேஜோ.2) இவ்வினை உவமிக்கப்படுகின்றது.

பயிர்போன்று வேரூன்றிச் செழித்து வளரும் இதனை வேரோடு களைய இறைவனை வேண்டும் இடத்தும் தாயுமானவரின் உவமை மிளிர்கின்றது.

“பைங்கூழ் வினைதான் படுசாவி யாவெமக்கு

எங்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ!”(எந்நாட்.தத்.19)

மாயை என்னும் மலமும் ஆணவம் கன்மம் போன்ற உவமை நிலையில் விளக்கமுறல் அருகி அமைகின்றது.

- மாயைச்சேறு (ஆசை.16)
- மாயாமனப்படலம் (கான்.7) என்பன அவை.
- மாலை வியாபார மயக்கென (எந்.யா.7) வருவதும் மாயையே குறிக்கின்றது போலும்.

மாயை படையாகவும் தானதன் இலக்காகவும், இன்னும் சிறிதே விளக்க நிலையில் மாயை புலியாகவும், அதற்குப் பலியாகும் தன்னை மானாகவும் உவமிக்கின்றார்.

“பாயப்புலிமுன் மான்கன்றைக் காட்டும் படி அகில

மாயைப் பெரும்படைக்கே இலக்காக எனை வைத்தனையே. (பாயப்.1)

- மனதுக்கண் அமைந்த பிறிதோர் மாசான அறியாமை, அவித்தை என்பன இருளாகவும் (தேஜோ.4 - ஆசை.17)
- புலனெனும் பொறிக்கே நேரே பாயும் வெளிமானாகவும் (பாயப்.10)
- இவை நீங்கிய நிலையில் தெளிந்த அறிவோ (போதம் சித்தம். ஞானம், விளக்காகவும் (ஆசை.17)
- அமைதியுறா நிலையில் திரைக டலாகவும் (எந்.தத்.10)
- மதயானையாகவும் (எந்.அன்.14)
- கலைஞானம் மணற் சோறாகவும் (பரா.187)

- பேரறிவாம் இறைவன், தொண்ருளமெனும் தூய கோயிலில் வற்றிருக்கும் திருமேனியாகவும் (பாயப்.8)

உவமிக்கப்படுகின்றன.

பாசி கலைந்து நன்னீர்

அவித்தை கலைந்து அறிஞர் சொல்லால் அறிவுறுநிலை - அறிவு பெறு நிலை கல் எறியப் பாசி கலைந்து தெளிநீர் தென்படுவதனை ஒத்து அமைந்துள்ளதாம்.



"கல்லெறியப் பாசி கலைந்து நன்னீர் காணநல்லோர்

சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே.(பரா.214

## கண்முளைத்தால் போலே

கருவறைக் குழவிபோல் கண்ணற்றிருக்கும் அறிவு, அதாவது அறியாமை நீங்கு நிலை, மீண்டும் கணணொளி பெற்ற இன்பநிலைக்கு ஒத்து அமையுமாறு சுட்டப்படும் பாடல் தாயுமானவரின் உவமை ஆட்சியில் குறிப்பிற்குரிய ஒன்றாகும்.

"காலால் வழிதடவும் காலத்தே கண்முளைத்தால்

---

போலே என தறிவிற் போந்தறிவாய் நில்லயோ"(பல்வகை.20)

இவை போன்றே. புலன்களும் அவற்றின் தன்மையும் உவமை அழகுடன் தரப்படுகின்றன.

## மனதின் தீய இயல்புகள்

- ஐவரென்ற பல வேடர் (சிற்சு4)
- வாயிலே ஐந்தில் புலன் எனும் வேடர் (சிவன்.5)
- பொறியில் செறி ஐம்புலக் கனி (ஆசை.13)
- வேட்டைப் புலப் புலையர் (எந்.நத்.6) எனவும்
- அறிவை அகப்படுத்தும் பொறியாகவும் (பாயப்.10)

இவை அமைகின்றன.

- அந்தக் கரணம் என்னும் ஆகாத பேய்கள் (பரா.251)
- கன்னம் கரிய நிறக் காமாதி ராட்சப் பேய் (பரா.265)

"பூதமோடு பழகவளர் இந்திரிய மாம் பேய்கள்
புத்தி முதலான பேய்கள்
போராடு கோபாதி ராட்சப் பேய்கள் என
போதத்தை ஊடழித்து...... " (மலைவளர்.8)

என்னும் பாடல் அடிகள் எல்லாத் தீய இயல்புகளும், அறிவை - மனத்தை மருட்டும் அலைக்கழிக்கும் பேய்களாக படைக்கப்பட்டமையைத் தெரிவிக்கின்றன.

## மனதின் ஆனந்த இயல்புகள்

தீமைகள் நீங்கும் போது சுகமும் ஆனந்தமும் (இன்பம்) கிடைக்கின்றன.

- சுகம் வெள்ளமாகவும் (மௌன.1)
- துக்கம் வெள்ளமாகவும் (எனக்.26)
- ஆனந்தம் அமிர்தமாகவும் (எனக்கென்.27)
- வெள்ளமாகவும் (பாயப்.40 - உடல்58 - ஆகாதோ.20)
- பரமானந்தம் வெள்ளமாகவும் (பாயப்.11.- பரா.368)
- இன்பம் வாரியாகவும் (ஏசற்.1)
- ஆழாழியாகவும் (ஏசற்.2)
- கடலாகவும் (ஏசற்.4 - சொலற்4)
- வெளியாகவும் (ஏசற்.8)
- அள்ளக் குறையா அகண்டித ஆனந்தம் எனும் வெள்ளம் (வேண்.4) எனவும்
- பேச்சுமூச்சு இல்லாத பேரின்ப வெள்ளம் (ஆனந்த.1)

## குறையுள்ள மனம்

தன்னிலும் இத்தகு குறைகள், அழுக்குகள் உள்ளன என்ற உணர்ந்த தாயுமானவர், தன்னையே

- நாய் எனவும் (பொன்.42 - ஆசை27 - எனக்கென.2 -பாயப்புலி.18 - இல்லை.4)
- பேய் எனவும் (ஆசை.9,20 -பாயக்.47)
- பாவி எனவும் (எந்நாட். யாக்.6)

கூறிக்கொள்கிறார். முன் இருண்டும் மனமும் உடலும் அலையும் - அலைக்கழிக்கப்படும் நிலைகளை அடிப்படையாகக் கொண்டனவாகும்.

## மலம் நீங்கிய உயிர் இறைவனை அணுகுவது

இதைத்தவிர, மலம் நீங்கிய உயிர் இறைவனை அணுகுவதை,

- ஊசி காந்தத்தினைக் கண்டு அணுகல் போலவே (கருணா.9)
- இறைவன் அன்பு உள்ளதைத் தன்பால் இழுப்பானோ எனவும் (பைங்.17)
- சமயங்கள் பரமானந்த வெள்ளமாய் இறைவனைச் சேர்தல், ஆறுகள் கடலை அடைதல் போல் எனவும் (பாயப்.11)
- இறைவனை இரங்க வேண்டும்போது.......

"கன்றினுக்குச் சேதா கனிந்து இரங்கல் போல எனக்கு
என்று இரங்கு வாய் கருணை எந்தாய்...... (பரா.34) எனவும்.

- இறையை விட்டு மனதை அண்டினால் தாயில்லாப் பிள்ளை போல் பித்தாகவோ (சச்கி.1) எனவும்
- இறையிருந்தும் தான் வாடுதல் தாய் இருந்தும் பிள்ளை வாடுதல் போல் (பரா.349) எனவும்
- பாலொடு நீரும் (எந்.நிற்கு.23)
- அப்பின் இடை உப்பும், தீயின் இடையே இரும்பும், தீபத்தின் இடைக் கற்பூரமும் (எந்.நிற்கு.6,7.8) போல்

இறை உயிர்க் கலத்தல் அமைகின்றது எனவும் அமைகின்ற சில உவமை நிலைகள் உள்ளன.

## இறைக்காட்சி கண்டு மகிழ்தல்

இறைக்காட்சி கண்டு மகிழும் என்பருவம், இரவியையும், முகிலையும், சந்திரனையும் காணக் காத்துத் தவமிருந்து கண்டபோது ஆனந்தமுறும் சரோருகம் போலும் பயில் போலும் சகோரம் போலும் அமைந்தது எனத் தாயுமானவர் படைக்கம் உவமைக் காட்சி முருகியல் இன்பம் பயக்கின்றது.

“தக்கரவி கண்ட சரோருகம்போல் என்இதயம்

மிக்கஅருள் கண்டு விகசிப்பது எந்நாளோ.(எந்.அன்பு நிலை.1 தா.பா.1228)

“வான்முகில் கண்ட மயூரபட்சி போல ஐயன்

---

ஞானநடம் கண்டு நடிக்குநாள் எந்நாளோ? (எந்.அன்பு நிலை.1 தா.பா.1229)

"சந்திரனை நாடும் சகோரபட்சி போல்அறிவில்

வந்தபரஞ் ஜோதியையான் வஞ்சிப்பது எந்நாளோ?. (எந்.அன்பு நிலை.1 தா.பா.1230)

## இந்த உலக வாழ்க்கைப் பற்றிய உவமைகள் ,

- இந்திர ஞாலக் கோலம் (தேஜோ.3) எனவும்
- சொற்பனம் (உடல்.1) எனவும்
- ஊசற் சுழல் (ஏசற்ற.1) எனவும்
- ஆடுங் கறங்கும் திரிகையும் (பாயப்.56) எனவும்
- இப்பொய் உலக வாழ்க்கை புலைச்சேரி வாதனை (பரா.185) எனவும்
- கான்ற சோறு (நல்லறிவே.30 எனவும்
- ஆடியோய் பரம்பரம் (பரா.205) எனவும்

உவமிக்கப்படுகிறது.

## மானுடப் பிறவியைப் பற்றிய உவமைகள்

இந்த உலகத்துப் பிறக்கும் பிறவியை கடலாகக் காண்பது மரபு. அந்த மரபு உவமையையும் தாயுமானவருக்கும் உண்டு. (தோ.ஜோ.2)

"வாதைப் பிறவி வளைகடலை நீந்த ஐயன்

---

பாதப் புணை இணையைப் பற்றுநாள் எந்நாளோ?” (எந்.அருள்.14)

- தந்தை, தாய், தமர் உறவினரைச் சந்தைக் கூட்டம் எனவும் (தேஜோ.3)
- அண்ட கோடியைக் கருப்பை அறை எனவும் (தே.ஜோ.7)
- இதயத்தைப் பத்ம பீடம் எனவும் (சிற்சு.6)
- தத்துவப் பேய் எனவும் (உடல்.29)
- தத்துவமாம் பாழ்த்த சட உரு எனவும் (என்.தன்.3)
- சொல்லில் பதர் நெல்லின் பதர் எனவும் (பரா.295)
- நித்திரை ஆகிய சத்துரு எனவும் (எந்.தத்.25)
- கண்ணாடி போல எல்லாம் காட்டும் திருவருள் எனவும் (ஆகாதோ.18)

அருகிச் சில உவமைகள் அங்கு அங்குத் தென்படுகின்றன.

## ஐய உவமைகளும் இல் பொருள் உவமைகளும்

இதைத்தவிர ஐய உவமைகளும் இல் பொருள் உவமைகளும் தாயுமானவர் பாடல்களில் உண்டு.

நெஞ்சின் நிலையை ஐய உவமையால் விளக்கியமை முன் கண்டோம். இறைவனை

“கரும்போ தேனோ முக்கனியொ என்னக் கலந்து நலம்

தரும் பேரின்பப் பொருளே...(தன்னை.3)

எனவும்,

தனக்கு மௌனி அளித்த அமிர்தமாம் மௌனத்தை,

"கற்கண்டோ,  தேனோ, கனிரசமோ, பாலோ, என்

சொற்கு அண்டாது என நான் சொல்லுவேன். (உடல்.7)

எனவும்,

## இறை இன்பத்தை

"................................நெஞ்சை கனல்மேல்

இட்ட மெழுகா உருக்கும் இன்ப வெள்ளம் ஆகிக்

அரும்போ, கண்டோ, சீனி சர்க்கரையோ, தேனோ,

கனி அமிர்தோ என ருசிக்கும்..."

என காட்டும் இடங்களிலும் ஐய உவமை பொருந்துகின்றது.

இல்பொருள் உவமை

இல்பொருள் உவமையாகச் சில வருகின்றன.

பிரம்மன் நாட்டிய அகில மாயையைக்

"கான்முயல் கொம்பே என்கோ கானலம் புனலே என்கோ

---

வான்முகம் உளரி என்கோ மற்று என்கோ விளம்பல் வேண்டும். (தேன்முகம்.1)

எனவும்,

நெஞ்சத்தை

“அருளேஒர் ஆலயமா? ஆனந்த மாய் இருந்த

பொருளோடு யான் இருக்கப் போய் ஒளித்த நெஞ்சே! நீ

“மருள்தீர் முயல்கோடா, வான்மலரே, பெய்தத் தேரோ,

இருள்தீ ர் நீஉறைந்தது எவ்விடமோ? காணேணே” (ஏசற்ற.9)

எனவும் ஐய நிலையில் உவமிக்கும் இடத்து முயல்கொம்பும் ஆகாயப்பூவும் இல் பொருள் ஆக அமைவதாலும் கானல் நீ பொய்க்காட்சி ஆனமையினாலும் இல் பொருள் உவமை ருந்துகின்றது.

---

# 7.தாயுமானவரின் ஓசைநயம்

பாடல்களுக்கு கற்பனை, உவமை, பழமொழிகள் அழகளிப்பது போன்றே ஓசை நயமும் அமைகின்றது.

பாவுக்குத் தனி இசை உண்டு. இது செவிக்கு இனிமை பயக்கின்றது.

பாவினங்கள் அனைத்துமே வரையறை நெகிழ்ச்சி காரணமாகப் பாக்களைவிட இனிமை பயப்பனவாய் உள்ளன. இந்த நிலையைத் தாயமானவர் பாடல்களில் காணலாம்.

பாடல்கள் அனைத்திலும் ஓசை நயமே நம் உள்ளத்தை ஈர்த்துப் பொருள் ஆழத்தையும் உணரச் செய்கின்றது.

வெறும் ஓசையோடு தாயுமானவர் பாடல்கள் அமைந்து விடவில்லை. சொற்கள் மீண்டும் மீண்டும் வருவதால், பொருள் அழுத்தமும் எண்ண விரவும் இசையின்பமும் கிடைக்கின்றன.

ஒன்றிஒன்றி நின்றுநின்றும் என்னை? என்னை
உன்னிஉன்னும் பொருள் அலைநீ உன்பால் அன்பால்
நின்ற தன்மைக்கு இரங்கும் வயி ராக்கியன் அல்லேன்
நிவர்த்தி அவை வேண்டும. இந்த நீல னுக்கே.
என்றும்என்றும் இந்நெற ஓர் குணமும் இல்லை
இடுக்குவார் கைப்பிள்ளை ஏதோ ஏதோ?
கன்றுமனத் துடன் ஆடு தழைதின் றால்போல்
கல்வியும் கேள்வியும் ஆகிக் கலக்குற் றேனே. (பன்மாலை.6)

---

ஓசைகளிலும் சில முறைகளை, அமைப்புகளைத் (Patterns) தாயுமானவர் பயன்படுத்துவதால் அதிலும் தனி இன்பம் நமக்குக் கிடைக்கிறது.

ஒரு பாடலில் கேள்விகள் பல தொடுக்கின்றார். இன்னொன்றில் உடன் பாடாகப் பல செய்தகிள் பெய்கினிறார் - தம் கருத்தை விளக்குகின்றார்.

நம்பிக்கையே மனிதனை உயிருடன் வைத்திருக்கிறது. நம்பிக்கை மிக உயரிய பொருள். நம்பிக்கை இல்லாவிடில், நம் நிலைமை மோசமாக இருக்கும்.

நம்பிக்கைத்தானே வாழ்க்கை. வாழ்க்கை என்பதே நம்பிக்கை. காதலைப் போன்றது நம்பிக்கை. வலுக்கட்டாயமாக அதைத் திணிக்க முடியாது.

இரு கையாலும் செயலாற்றுவதற்கு நம்பி-க்-கை தேவை. நம்பிச் செயலாற்றுவது என்பபதே பொருள்.

இறைவன் - சுத்தவெளி - வெட்டவெளி - இறைவெளியின் ஆற்றல், நினைத்தல் எதைச் செய்ய முடியாது?

தாயுமானவருக்குச் சில வினாக்கள் உள்ளத்தே எழுகின்றன. இக்கடல் எவ்வாறு கரையின்றி அடங்கி நின்று கொண்டிருக்கிறது. என நினைத்துப் பார்க்கின்றார்.

நஞ்சு அமுதமாவது எப்படி? கடலில் அக்னி நிலையாக இருக்கிறதே!

பூமியும் பரிமாண அளவில் பெரிதான கோளங்கள், நட்சத்திரங்கள் எவ்வாறு கவிழாமல் நிலை நிற்கின்றன? அவை ஈர்ப்பு ஆற்றலால் எவ்வாறு நின்று கொண்டிருக்கின்றன?

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும். அளப்பெருந் தன்மை வளப்பெருங் காட்சி. ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின் நூற்றொரு கோடியின் மேற்படி விரிந்தன" எனத் திருவண்டப் பகுதயில் மாணிக்ககவாசகர் விளம்புகின்றார்.

1. மேருவையே வளைத்தான் வல்லோன் அது வளையவில்லையா?
2. மேகங்கள் வச்சிராயுதத்திற்கு அடங்கி ஏவல் கேட்கவில்லையா?
3. இராமன் கால் அடிபட்டுச் சாபம் நீங்கிக் கல் சிலையும் மடமங்கையாகவில்லையா?
4. உலகில் எத்தனையோ சித்திவகைகள் நடை பெறவில்லையா?
5. இன்றுகூட எத்தனையோ வகை சித்திகள் நடைபெறுவதை நாம் பார்த்தில்லையா?

---

ஆனால் என் மனம் ஒருநிலைப்பட மட்டும் என்னால் செய்ய இயலவிலையே! நீ செய்யக் கூடாதா? எனக் கேட்கின்றார் தாயுமானவர்.

“ ஓ” என மீண்டும் மீண்டும் வரும் வினாத் தொகுப்பு, ஓசை இனிமை அளிக்கினறது.

ஆழ் ஆழி கரையின்றி நிற்கவிலையோ? கொடிய
ஆலம்அமுது ஆகவிலையோ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ?
அந்தரத்து அகிலகோடி

தாழாமல் நிலைநிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளைய இலையோ?
சத்த மேகங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித் திட இல்லையோ?

வாழாது வாழவே இராமன் அடி யால் சிலையும்
மடமங்கை ஆக இலையோ?
மணிமந்தரம் ஆதியால் வேண்டுசித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்க இலையோ?

பாழான என்மனங் குவிய ஒரு தந்திரம்
பண்ணுவது உனக்கு அருமையோ?

பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கம் அறநிறைகின்ற
பரிபூர ணானந்தமே. (பரிபூர ணானந்தமே9)

எதுகை மோனைகளும் ஓசைக்கு அடிப்படையாக அமைதல் உண்டு. தாயுமானவர் பாடல்கள் பெரும்பான்மையும் எதுகை மோ யுடனேயே அமைகின்றன.

அவற்றுடன் சொல் தொடர்ந்து பொருளமைதியும் சிறக்கும் போது அப்பாட்டுக்கு இன்னும் ஏற்றம் பெறுகின்றது.

உழைப்புக்குப் பயன் உண்டு. அந்தப் பயனை அனுபவித்தே ஆக வேண்டும்.

வினைகளின் கூட்டை, கருமையத்தில் இருக்கும் பதிவுகளை, வங்கியில் பணம் போடுவதோடு இணைத்துப் பேசுவார்கள்.

பணம் வங்கியில் போடப் போடச் சேர்ந்து கொண்டிருக்கும். இடை இடையே எடுத்துச் செலவு செய்கின்றோம். அது கழிக்கப்படுகினறது.

நாம் நல்வினை செய்யின், நல்லதும், பொன் விலங்கும். தீது செய்யின், தீதும் - இரும்பு விலங்கும் கிடைப்பதாகக் கூறுவார்கள்.

வினைகளை- பதிவுகளை, அவை நல்லனவாயினும் தீயனவாயினும் துய்த்தே யாதல் வேண்டும்.


இங்கு திருவள்ளுவரின் "தீவினை செய்தார் கெடுதல் நிழல் தன்னைவீயா தடியுறைந் தற்று என்னும் குறள் நினைக்கத் தக்கது.

---

இதனைத்தான் வேதாத்திரி மகரிசி “செயல்விளைவுத் தத்துவம்” என்பார்கள்.



இராமகிருஷ்ண பரமகம்சர், ரமண மகரிசி போன்றவர்களும் தமக்கு வந்த நோயை அனுவித்தே முடித்தார்கள் என்பது வரலாறு.

இருப்பினும், “ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உழற்றுவபர்” என்பதற்கு இணங்க விதியை மதியால் , முயற்சியால் வெல்லலாம்.

ஆயினும் அம் மதி மாயை மயக்கத்தில் அகப்பட்டு மயங்கும் போது விதிக்குத் தோற்று விடுகின்றது.

"விதி" "மதி" எனும் சொற்களும் "திக" ர எதுகையும் தொடரும் போது, பொருள் இன்பத்தோடு ஓசை நயமும் இணைகின்றது.

வினைகளைப் பற்றிக் கேள்வி கேட்கும்போது, விதை முந்தியா மரம் முந்தியதா? என்பதற்குரிய நிலையே அமைகின்றது.

"விதியையும் விதித்து என்னை விதித்திட்ட
மதியையும் விதித்தம் மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருள்
கதியை எப்படி கண்டு களிப்பதே"

தலையாகு எதுகையால் ஓசையின்பம் மிகுதலைப் "பொன் மாதரை" "பாயப்புலி" போன்ற பகுதிகளில் அமைந்த பல பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இயற்கை, சுத்தவெளி, வெட்டவெளி, ஆகிய இறைவனை வணங்குவதைக் காட்டிலும் அவனைப் பற்றியே எப்போதும் நினைத்துக்

கொண்டிருக்கினற் அடியவர்களைத் வணங்கினாலே போதும் என்கிறார் தாயுமானவர்.

கண்ணுள் ஒளியாகவும், உள்ளத்துள் கருத்தாகவும், வெறும் வெளியாகவும் இருக்கின்ற இறைவனை, இரவும் பகலும் உள்ளத்துள் வைத்து எண்ணிக் கொண்டிருக்கின்றவர்களைத் தொழுதல் வேண்டும் என்கிறார்.

இதனைக் கூறும் பாடல் தலையாகெதுகையாலும் ஓசை இனிமை பெறுகின்றது.

“கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை
எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்தொழும் தெய்வமே” (பொன்னை75)

பாடலுக்கு அமையும் “அந்தாதி” யும் ஒருவித ஓசை இனிமை பயத்தலால் செவிக்கு இன்பம் அளிக்கின்றது.

ஒளியே, ஒளியின் உணர்வே, உணர்வின் உவகைபொங்கும்
களியே, களிக்கும் கருத்தே, கருத்தைக் கவளங்கொண்ட
வெளியே, வெளியின் விளைசுக மே, சுகர் வீறுகண்டும்
தெளியேன். தெளிந்தவரைப் போற்றி டேன் என்ன செய்குவனே?
(பாயப்புலி) 46).

---

ஒரு சொல் மீண்டும் மீண்டும் பயில்வதாலும் நயம் ஏற்பட வாய்ப்புண்டு.

“பொய் உலகும் பொய்உறவும் பொய்உடலும் பொய்எனவே

மெய்யைநினை மெய்எனவே மெய்யுடனே காண்பேனா.” (காண்.6)

இறைவனைப் பற்றிப் பேசுவதற்கு ஒரு சொல்லே போதும். அச் சொல்லுள் அனைத்தும் அடங்கும் எனக் கூறுகின்றார் தாயுமானவர்.

இதனை “மொழி” என்ற சொல்லை அடுக்கிக் காண்பித்துப் பாடலின் நயத்தை மிகுவிக்கின்றர்.

இப் பாடலைப் பொதுநிலையில் ஒருவன் படித்தால் தமிழ் மொழியின் பெருமையினையே உணர்த்துவதாகத் தோன்றும். இங்கே தமிழ் தெய்வநிலை பெறுகின்றது.

ஒருமொழியே பலமொழிக்கும் இடம்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம் ஒழிக்கும் ஒழிக்கும் என மொழிந்த
குருமொழியே மலைஇலக்கு. மற்றைமொழி யெல்லாம்
கோடு இன்றி வட்டுஆடல் கொள்து ஒக்கும் கண்டாய்
கருமொழி இங்கு எனக்ககு இல்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்புஅனைய சொல்கொடு உனைக் காட்டவும் கண்டனை.மேல்
தருமொழி இங்கு உனக்கு இல்லை உன்னைவிட்டு நீங்காத்
தற்பரமாய் ஆனந்தப் பொற்பொதுவாய் நில்லே. (நினைவு ஒன்று2.)

## “எண்ணு வண்ணம்”

எண்களை வைத்துப் பாடலை நயம்பட அமைக்கும் முறையும் அதிலும் பொருள் ஆழம் காணும் நிலையும் உண்டு.

ஒன்றுமுதல் ஒன்பது வரை எண்களை அமைத்து, சிறந்த கருத்துள்ள பாடல் ஒன்றை நமக்குத் தருகிறார் தாயுமானவர்.

எனக்கு எந்தவித் ஆற்றலும் இல்லை. நான் சிறியேன். நான் ஒருவன். இந்த ஒருவனுக்கு நீ வைத்துள்ளவை இருவினைகள். முக்குணங்கள், நான்கு கரணங்கள், ஐந்து புலன்கள், ஆறு பகைகள், எட்டு மதங்கள், என்பன.

நயோ ஒன்பது வடிவங்களில் வருகின்றாய் - என நகைச் சுவையாகப் பேசுவது போன்று எண்களை அமைத்துப் பாடல் சுவையைக் கூட்டுகின்றார் தாயுமானவர்.

கருணைமொழி சிறிது இல்லேன் ஈதல் இல்லேன்,
  கண்ணீர்கம் பலைஎன்தன் கருத்துக்கு ஏற்க
ஒருபொழுதும் பெற்று அறியேன், என்னை ஆளும்
  ஒருவா! உன் அடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையும் முக்குணமும் கரணம் நான்கும்
  இடர்செயும் ஐம் புலனும் கா மாதி ஆறும்
வரவரவும் ஏழைக்கு ஓர் எட்டது ஆன
  மதத்தொடும்வந்து எதிர்த்தநவ வடிவம் அன்றே. (பன்மாலை 2)

- ஏழு என்ற எண் ஏழை என்பதிலும்,
- ஒன்பது என்ற எண் நவ வடிவம் எனவும் வருகின்றன.
- இருவினை தீவினை, நல்வினை.
- முக்குணம் - அமைதி, ஆட்சி, அழுதல் ( சாத்துவம், தாமதம், ராட்சசம்) அல்லது ஆணவம், கன்மம், மாயை.
- கரணம் நான்கு - நாட்டம், மனம், எழுச்சி, இறுப்பு.
- ஐம்புலம் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்,
- காமாதி ஆறு - செருக்கு, சினம், சிறுமை, இவறல், மாண்பிறந்த மானம், மாணாஉவகை.
- மதம் எட்டு - குலம், உருவம், இளமை, கல்வி, செல்வம், தற்பெருமை, உதவி, இயல்பு,
- நவ வடிவம் - அத்தன், அன்னை, ஓசை, எழுத்து. அருளோன், ஆசான், அரி, அரன்,அயன்

என இந்த எண்ணகள் விளக்கம் பெறுகின்றன. இவ்வாறு எண்களில் பயிற்சியால் அமையும் அழகு “எண்ணு வண்ணம்” என்படும் . இதுவும் இலக்கிய நயம் பயக்கின்றது.

## ஒலிக்குறிப்புச் சொற்கள்

ஒலிக்குறிப்புச் சொற்களை அங்கங்கே பெய்தும் நயம் மிகுவிக்கின்றார் தாயுமானவர்.

- மொகுமொ கென வரு வழிநீர்(பொருலள்.4)

---

- ஒன்றை மெணமெணன்று அகம் வேறதாம் வித்தை (ஆனந்தமான.3)
- தமிதி மென்று வரவும் (வண்ணம்) என்பனவும்,
- வெடுக்கெ்றைசத் தெடுத்தால்ல் (சுகவாரி.5)
- அம்மம்ம (தேசோ.4, 10)

என்பனவும் இத்தகையனவாகும்.

## அடுக்குத் தொடர் பயிற்சியும்

அடுக்குத் தொடர் பயிற்சியும் இனிமை தரும் வண்ணம் அங்கங்கே பொருந்தி வருகின்றன.

- உய்ந்தேன் உய்ந்தேன் (வம்பனே.1)
- இருக்கிலேன் இருக்கிலேன் (வம்பனே.2)
- என் செய்வே என்செய்வேன் (எனக்கென்.22) என வினை முற்றுக்களும்.
- ஈட்டியீட்டி (சிவன்.செயல்.2)
- இடைந்து இடைந்து (சிவன்.3)
- எழுந்து எழுந்து (சிவன்.3)
- உடைந்து உடைந்து (சிவன் 3) போல் எச்சங்களும்.
- மௌன மௌனம் (பொன்னை.42)
- மௌனம் மௌனம் (பாயப்.24)
- அபயம் அபயம் (பாயப்.44) என்பன போல் பெயர்களும்.
- ஐயமல்லை ஐயமில்லை (பரா.315)

எனத் தொடரும் அடுக்கி நயம் காண்கின்றார் தாயுமானவர்.

## முரணுடைய சொற்கள்

முரணுடைய சொற்களைப் பயன்கொள்ளும் போதும் நயம் கிடைக்கின்றது.

இன்று, சமுதாயத்தில் இல்பாகவே முரணில் - மாற்றத்தில் இன்பத்தைக் காண்பதைப் பார்க்கின்றோம்.

ஆடவர், பெண்டிர் போன்று முடி வளர்த்துக் கொள்வதும். பெண்டிர், ஆடவர்போல் ஆடை அணிவதையும் காணும்போது, குற்றியோ, மகனோ இத் தோன்றுகின்ற உரு" எனச் சொல்லதிகாரத்தில் படித்த இலக்கணம் நம் நினைவுக்கு வருகின்றது.

"ஆணோ பெண்ணோ இத்தோன்றுகின்றவர்" என்று சில வேலைகளில் கேட்கத் தோன்றுகின்றது.

மன அமைப்பில் ஏற்பட்ட முரணே இதற்குக் காரணம். தாயுமானவர் பாடல்களில் இந்த முரண் அணி அல்லது அழகு மட்டும் ஏற்தாழ 200 இடங்களில் காணப்படுகின்றது.

தாயுமானவர் ஆட்சியில் இருவகை பயிற்சிக்கு இடம் உண்டு. எதிர்மறைத் தொடரும் உடன்பாட்டுத் தொடரும் தொடர்ந்து வந்து பின்னதை முன்னது சிறப்பிக்கும் நிலை ஒன்று. இதனையே சில பகுப்பாகத் தரினும் இழுக்கன்று. முதற்பகுப்பு ---------

- தூங்காமல் தூங்கி (பைங்.30,காண்.10)
- புல்லாமல் புல்லி (எந்.அருள்16)
- பராமல் பார்த்து (எந்.நிற்கு.25)

- தூண்டாமல் தூண்டி (எந்.நிற்கு.27)
- நோக்காமல் நோக்கி (காண் 26)
- சேராமல் சேர்ந்து (ஆகாதோ.17) என வருவன.

இவை பருப்பொருணிலையில் புலனுணர்க்கு அப்பாற்பட்டு நுண்ணுணர்வு நிலையில் அறிதலை உணர்த்துகின்றன.

## இன்னோர் பகுப்பு

1. கல்லாத அறிவு (தேசோ.9)
2. அறியா அறிவு (எந்.அறிஞ2)
3. அறிவோடு அறியாமை அற்ற அறிவு (எந்.நிற்கு2)
4. வடிவில்லாவடிவு (ஆரணம்.10)
5. வாரா வரவு (பைங்.51)
6. காணாத காட்சி (பைங்.16) என்பன போன்றன.
7. பொய்யென்ற மெய்யர் (பரா.379)
8. அரு வுருவம் (எந்.பொருள்.10)
9. கண்டும் காணேன் (எந்.அன்பு9)

என்பனவற்றையும் இதன்கண் அடக்கலாம். இவை அறிநதவற்றை விளக்கவியலாத நிலையினை அடிப்படையாகக் கொண்டனவோ எனத் தோன்றுகின்றது.

- திரையில்லக் கடல் (பன்மா.9)
- திரையில்லா நீர் (ஆச.13)
- திரையற்ற நீர் (எந்.அறிஞ.11)
- வெப்பிலா..விளக்கு (ஆரணம்.4)

என்பன இயற்கையை அதன் தன்மைகளிலிருந்து இயல்புகளிலிருந்து மாற்றிச் சுட்டி வேறுபடுத்தும் நிலையில் வருவன.

- சொல்லாடா வூமர் (பரா.76)
- சொல்லறியாவூமர் (எந்.ஆனந்த.4)
- வாயென்றும பேசா மவுனி (பரா.181)
- பேசாத மோன நிலை (பரா.284)

என்பனவற்றில் வரும் எதிர்மறை தொடரும் சொல்லைச் சிறப்பிக்க வருவனவாம். சொல்லழகில் ஒருவகைப் பொருள் ஆழத்தோடு அமைந்தவை இந்த முதல் வகை.

### இரண்டாவது வகை

- பொய்ப்பணி - மெய்ப் பணி,
- புன்மலம் - நின்மலம்,
- மண்ணகம் - விண்ணகம்,
- ஆதி யந்தம்
- தீதெனவும் - நன்றெனவும்,
- இன்பமும் - துன்பமும்,
- தன்னை உன்னை,
- நன்நெஞ்சம் -வன்நெஞ்சம் போன்றவை.


இறைவன் இல்லாத பொருளே இல்லை. அதோடு பகைப் பொருள்களிலும் இருக்கின்றான்.

1. சோதியனே துன்னிருளே ஆதியனே
2. அந்தம் நடு ஆகி அல்லானே,
3. “இன்பமும் துன்பமும் அல்லானே உள்ளானே,

---

4. யாவையுமாய் அல்லவையுமாய்"

போன்ற மணிவாசகர் வாக்கும் நினைக்கத்தக்கது.  ஒரே பாடலில் மிகுதியான விடத்தும் முரண அடக்கிப் பேசுகின்றார் தாயுமானவர்.




சுத்தமும் அசுத்தமும்; துக்கசுக பேதமும்;
    தொந்தமுடன் நிர்த்தொந்தமும்;
ஸ்தூலமொடு சூட்சமமும்; ஆசையும் நிராசையும்;
    சொல்லும்ஒரு சொல்லின் முடிவும்;

---

பெத்தமொடு முக்தியும்; பாவமொடுஅபாவமும்;
 பேதமொடு பேதநிலையும்;
பெருமையொடு சிறுமையும்; அருமையுடன் எளிமையும்;
 பெண்ணினுடன் ஆணும்; மற்றும்

நித்தமும் அநித்தமும்; அஞ்சனநி ரஞ்சனமும்;
 நிஷ்களமும் நிகழ்சகளமும்;
நீதியும் அநீதியும்; ஆதியோடு அநாதியும்;
 நிர்விஷய விஷயவடிவும்;

அத்தனையும் நீஅலதுள் அத்தனையும் இல்லைஎனின்,
 யாங்கள் உனை அன்றி உண்டோ?
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
 ஆனந்த மானபரமே. (ஆனந்த மானபரம்.5)

- ஸ்தூலம் - பருமை.
- சூட்சுமம் - நண்மை,
- பெத்தம் - கட்டு.
- முத்தி - ஒட்டு.
- பாவம் - உள்ளல்.
- அபாயம் - உள்ளாமை.
- அஞ்சம் - குற்றம்.
- நிரஞ்சனம் - குற்றமின்மை.
- சகளம் - நிர்வியம், காணப்படாதவை.

- விடயவடிவம் - காணப்படுபவை.

இவ்வாறு பாடல் முழுவதும் முரணாகு நிலையில் வேறு சில பாடல்களும் வருகின்றன.

- சின்மயா.8.
- ஆனந்த.2
- எங்கு.1
- ஆகார.6, 13
- எனக்கென்.23
- மண்டலம் 6.
- பாயப்புலி. 32.
- உடல்.47.
- பொருள்.4

இத்தகு முரணுக்கு நூலிறுதியல் வரும் வண்ணமும் மிகுதியாக இடம் அளிக்கின்றது.

- முன்பின்னொடு கீழ்மேல் நடுப்பக்கம் (எங்கு.11) மெய்போலிருந்து பொய்யாம் சடக்கை (சச்சி.2)
- நீண்ட நெடுமை அவலக் குறுக்கு (ஆகார.13)
- தனைமறந்து உனை மறவா (தன்னை.2)
- குற்றம் குறை குணம் மேலிட (பரா.303)
- அறியாமை ஈதென்றறிவித்த (பரா.372)
- கவலை தொலைத்துத் தொலையா இன்பம் (பைங்.31)
- இன்பணைந்தார்…வாழ்விழந்தேன் (பைங். 32)
- நான்கருதின் வர நாடார்…தானே அணைவர் (பைங்.33)
- பச்சை நிறமாய்ச் சிவந்தபாகம் (எந்.ஆனந்த.6)

- ஆடலைக் காட்டி…ஆடல் ஒழித்து (எந்.நிற்க.22)
- முன் நினைக்கப் பின்மறக்கும் மூடவிருள் (பல.11)
- மவுனியாய்த் தோன்றி…சொல்லாத வார்த்தையைச் சொன்னால் (ஆனந்த.1)
- பற்றிய பற்றற..பற்றச் சொன்னால் (ஆனந்தக்.3)
- பேசாத காரியம் பேசினான் (ஆனந்த.3)
- சிந்தை பிறந்தது மங்கே..சிந்தை இறந்து தெளிந்ததும் அங்கே (ஆனந்தக்.20)

போன்ற முரண்தொடர்கள் எண்ணிஎண்ணி இன்புறத் தக்கனவாகும்.

முரண்தொடர் அமைப்பு போன்றே பிற வகைத் தொடர் அமைப்புகளும் நயம் பொருந்த வருவதுண்டு.

- ஒளிகண்டு ஒளிகின்ற இருள் ( எங்கும். 1)
- அறிந்தநீ அறிவை அறிவிலி அறிகலேன் (ஆசை. 32)
- பாராசையற்றிறையைப் பற்றற நான் பற்றி நின்ற (பைங்.39)
- காலால் வழிதடவும் காலத்தே கண்முளைத்தால் போலே (பலவகை.20)
- கைத்தல நகப்படை விரித்த புலி சிங்கமொடு கரடி (சச்கி.6) போன்றன.




# 8.தாயுமானவரின் இலக்கிய மரபுகள்.

தாயுமானவர் பாடல்கள் முழுவதும் இலக்கிய மரபுகளை பின்பற்றப்படுகின்றன என்றால் அது மிகையாகாது.

உலக உயிர்கள் அனைத்துக்கும மூலமாக - தலைவனாக - நாயகனாக இறைவன் அல்லது சுத்தவெளி, வெட்டவெளி, இறைநிலை, இயற்கை இறந்த ஆற்றல் அமைகின்றது என்பது பொதுக் கருத்தாகும்.

ஒரு குடும்பம், அக்குடும்பத்தில் 18 குழநைந்தைகள். அக்குழந்தைகள் அனைத்திற்கும் பெற்றோரின் அன்பு, முழுநிலையில் தரப்படுகின்றதே தவிரப் பகிர்ந்து 18 பங்காக வைத்து அன்பு செலுத்தப் படுவதில்லை.

ஆயினும் பொருள் அவ்வாறே பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது. உயிர்கள் அனைத்தினிடமும் இறைவன் ஒரே விதமான அன்பை முழுநிலை அன்பைச் செலுத்துகின்றான்.

அந்த அன்பிலும் சிறந்த அன்பு - உயிர் இரண்டறக் கலக்கின்ற அன்பு, காதலன் காதலியர் அன்பே. சிற்றின்பத்தில் வழிப் பேரின்பத்தை உணர்த்துவது பொதுவான இயல்பு.

சிற்றின்பம் புரிந்த இறையடியார் பெரும்பான்மை யோரும், தம்மை நாயகியராக்கிக் கொண்டு, இறைவனை நாயகனாகக் கருதி நாடும் நில உருவாகியது போலும்! இத் தமிழ்மரபு வழியில்தான் நம் தாயுமானவரும் பயணிப்பதைப் பார்க்கின்றோம்.

சிற்றின்பத்தின் வழிப் பேரின்பத்தை உணர்த்துவதற்கும் வித்திட்ட முதல் இலக்கியம் சிலப்பதிகாரமே. சிலப்பதிகாரத்தில் “குன்றக் குரவை”, சிற்றின்ப வழிப் பேரின்பம் உணர்த்தும் பகுதி.

தாயுமானவர் தன்னையே தலைவியாக்கிக் கிளியைக் காட்டித் தூதனுப்பும் காட்சி - பேசும் பேச்சு நம் நெஞ்சை உருக்குகின்றது.

இறைத்தலைவனைக் கொண்டமையும் இந் நாயகன் நாயகி "பாவம்" தூதிலக்கிய மரபைக் காட்டுகின்றனது.

கிளியைத் தூதனுப்பின்றாள் தாயுமானவர் தலைவி. இக் கிளிக்கு, சுகம் என்ற பெயருண்டு. அது சுகத்தைத் தருவதனால் போலும்!

அகமேவும் அண்ணலுக்கு என் அல்லல் எல்லாம் சொல்லிச்
சுகம் ஆன நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே. (பைங்கிளியே 2.)

ஆவிக்குள் ஆவிஎனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்கும் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே. (பைங்கிளியே 3).

ஆரும் அறி யாமல் எனை அந்தரங்க மாகவந்து
சேரும்படி இறைக்குச் செப்பிவா பைங்கிளியே. (பைங்கிளியே 4)

ஏற்கனவே இறையோடு இணைந்து இடையறா இன்பத்தைப் பெற்றிருக்கின்றார் மாணிக்கவாசகர் போன்று தாயுமானவர் ,

கண்ணுள்மணி போல்இன்பம் காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே. (பைங்கிளியே 2.).

இறைவன் விரைவில் வந்து அடைதலை விரும்பிய நிலை

நீர்க்குமிழி போன்ற உடல் நிற்கையிலே சாசுவதம்
சேர்க்கஅறி யாமல் திகைப்பேனோ பைங்கிளியே. (பைங்கிளியே 34)

என்பதில் தெரிகின்றது. இங்கும், இந்த உடல்இருக்கும் போதே உருவ சித்தியோ. அருவ சித்தியோ, அருவருவச் சித்தியோ அடைதல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தாயுமானவர் வெளியிடுகின்றார்.

---

பச்சைகண்ட நாட்டில் பறக்கும்உனைப் போல் பறந்தேன்
இச்சைஎல்லாம் அண்ணற்கு இயம்பிவா பைங்கிளியே. (**பைங்கிளியே** 37.).




# 9.தாயுமானவரின் பழமொழிகள்

**பழமொழிகள்** ஒரு சமுதாயத்திலே நீண்ட காலமாகப் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவக் குறிப்புகள் ஆகும்.

பழமொழிகள் அச் சமுதாயத்தினரின் அனுபவ முதிர்ச்சியையும், அறிவுக் கூர்மையையும் எடுத்து விளக்குவதாக அமைகின்றன.

இவை <u>நாட்டுப்புறவியலின்</u> ஒரு கூறாகவும் அமைகின்றன. எடுத்துக்கொண்ட பொருளைச் சுருக்கமாகவும் தெளிவுடனும் சுவையுடனும் பழமொழிகள் விளங்கவைக்கின்றன.

சூழமைவுக்கு ஏற்றமாதிரி பழமொழிகளை எடுத்தாண்டால் அந்த சூழல் அமைவை அல்லது பொருளை விளங்க அல்லது விளக்க அவை உதவும்.

உலகில் வழங்குகின்ற பல பழமொழிகளையும் இணைத்துக் கருத்தை விளக்குவது தாயுமானவரின் மற்றொரு சிறப்பான பண்பாகும்.

தாயுமானவர் தம் பாடல்களில் பல பழமொழிகளைக் கையாண்டு, அவற்றின்மூலம் கருத்துக்களைத் தெளிவுபடுத்துகின்றார்.

உலகில் வழங்குகின்ற பல பழமொழிகளையும் இணைத்துக் கருத்தை விளக்குவது தாயுமானவரின் மற்றொரு பண்பாகும்.

## பழமொழி -உவமையால் விளக்கும் மாண்பு

உவமையையும் பழமொழியையும் இணைத்து, அதாவது பழமொழியையே உவமையாகக் கையாண்டு கருத்துக்களைத்தெளிவு படுத்தும் வன்மை உடையவர் தாயுமானவர்.

- குரங்குக்கைப் பூமாலை
- பாம்பின் வாயில் தேரை
- யானைவாய்க் கரும்பு

---

என்பன நாம் நாள்தோறும் கேட்டும் பயன்படுத்தியும் இருக்கின்றோம்.

குரங்குக்கைப் பூமாலை

பழமொழிகளுள் உவமை நிலைக்களத்தில் தோன்றியவை. மனமாகிய மாயையுள் அகப்பட்டு அதன் வழிச் சென்றால் இறைவனின் ஈடும் எடுப்புமற்ற இணையடிகளை சேரவியலாதுதான்,

மனமாகிய மாயையுள் அகப்பட்டு அதன் வழிச் சென்றால் இறைவனின் ஈடும் எடுப்பும் அற்ற இணையடிகளைக் சேர

"மனமான வானரக்கைம் மாலை யாக்காமல்

ஏனையான் அடிகள் அடி எய்து நாள் எந்நாளோ?

மனத்தின் மாயையைக் கண்டு, நானே உன்னை நடத்த வல்லேன் எனக் கூறுகின்றது புத்தி.

## பாம்பின் வாய்த்தேரை

மனத்தை காட்டிலும் அமைதியும் ஆற்றலும் உடையவன் யான் என நெஞ்சிடம் கூறுகின்றது. அதில் நெஞ்சம் ஏமாந்து விட்டாலும் இறை அடியை அடைய முடியாது தானே.

"புத்திஎனும் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை

ஒத்தவிடாது எந்தையருள் ஓங்கு நாள் எந்நாளோ?

இங்கு இவை இவையால் இன்னது ஆகாது. அவனருளால் மட்டும் அவைஇயலும் என்ற வண்ணமும் வலியுறுத்தப்படுகின்றது.

## யானைவாய்க் கரும்பு

ஆணவமிருக்கின்றதே, அது செயல்பட முனைந்து. துணிந்தெழுந்து, ஆங்காரமாகிய என்னைச் சேர். இறைவனிடம் இணைந்து விடலாம் எனச் சூழ்ச்சி செய்கின்றது.

"ஆங்காரம் என்னும் மதயானையின் வாய்க் கரும்பாய்

ஏங்காமல் எந்தைஅருள் எய்துநாள் எந்நாளோ?

இவ்வாறு மனத்தின் பல்நிலைகள் பழமொழி -உவமையால் விளக்கம் பெறும்போது புதுமை பயக்கின்றன.

## வீட்டுக்கடங்கா மனைவி

மனம் என்பது ஒன்று நமக்கு இருப்பதாகவே தெரியவில்லை. பல இடங்களில் சூழிநிலைக்குத் தக்க நாம் பேசம்போது நம் மனத்தைத் தனியே கழற்றி வைத்துவிட்டுத் தான் பேசுகின்றோம்.

"மன்" நிலைபேறு எனப்பொருள்படும். மன்னுதல் உடையது தான் மனம், மனத்தை உடையவனே மனிதன், மனமில்லாதவன் மனிதப் பண்புகளுகளுடையவன் ஆகான்".

இத்தகைய மனம் எங்கிருக்கின்றது என்பதே நமக்குத் தெரியவில்லை.

அது நம்மைப் படுத்துகின்ற பாட்டினைச் சொல்லில் வடித்துக் காட்ட இயலாது.

சொன்னசொல் கேளாத பிள்ளைபோல் துள்ளுகின்ற மனத்தைத் தாய் தொட்டிலில் படுக்க வைத்து ஆட்டி, பின்பு உணர்வு வரக் கிள்ளுகின்றாளாம்.

அதோடு எழுநிலைகளில் விழிப்போடு இருக்கின்ற மனம் தலைகொழுத்துத் திரிகின்றது.

நனவு கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம், கட்புலனாம் புள்ளி (விந்து), செவிப்புலனாம் ஓசை ஆகிய ஏழு நிலையைங்களிலும் தலை சுற்றி ஆடுகின்றது.

“புருஷனுக்கு அஅடங்காப் பெண்டாட்டி” போலத் தானே விரும்பம்போல் புறம் போந்து செயல்படுகின்றது.

இத்தகைய மனம். காணாத கேளாவற்றை எல்லாம் கண்டதாகக், கேட்டதாகக் கபட நாடகம் ஆடுகின்றது.

இத்தகு நிலையுடைய மனத்தை அடக்க இயலவில்லை. நீதான் அடக்கல் வேண்டும் என்பது வேண்டுகோள்.

சொன்னசொல் கேளாத பிள்ளைபோல், துள்ளுகின்ற மனத்தைத் தாய் தொட்டிலில் படுக்கவைத்து ஆட்டி, பின்பு உணர்வு



வரக் கிள்ளுகின்றாளாம்.

அதோடு எழுநிலைகளில் விழிப்போடு இருக்கினற மனம் தலைகொழுத்து திரிகின்றது.

நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம், நட்புலனாம் புள்ளி (விந்து), செவிப்புலனாம் ஓசை ஆகிய ஏழு நிலையங்களிலும் மலைசுற்றி ஆடுகின்றது.

"புருஷனுக்குகு அடங்காப் பெண்டாட்டி போலத் தானே விரும்பம் போல்புறம் போந்து செயல் படுகின்றது.

இத்தகைய மனம், காணாத கேளாதவற்றை எல்லாம் கண்டதாக் கேட்டதாகக் கபட நாடகம் ஆடுகின்றது.

இத்தகு நிலை உடைய மனத்தை அடக்க இயலவில்லை. நீ தானே அடக்கல் வேண்டும் என்பது வேண்டுகோள்.

-----------------------------------------------------------------------------------------------------------------

இங்கு பிள்ளையைத் தொட்டிலிட்டுத் தொடையினைக் கிள்ளல், “விட்டுக்கு அடங்கா மனைவி”, போன்ற பழமொழிகளை பயன்படுத்தி விளக்குகின்றார்.

இங்கு பிள்ளைத் தொட்டிலிட்டுத் தொடையினைக் கிள்ளல் - “வீட்டுக்கடங்கா மனைவி” போன்ற பழமொழிகளை பயன்படுத்தி விளக்குகின்றார் தாயுமானவர்.

“சொல்லான தில் சற்றும் வாராத பிள்ளையைத்
தொட்டில் வைத்து ஆட்டிஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போல் சங்கற்பம் ஒன்றில்
தொடுக்கும். தொடுத்து அழிக்கும்.ஃ

பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றியாடும்.
புருஷனில் அடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்சரிக்கும்.

கல்லோடு இரும்புக்கு மிகவன்மை காட்டிடும்
காணாது கேட்ட எல்லாம்
கண்டதாக காட்டியே அணுவாச் சுருக்கிடும்.
கபட நாடக ஜாலமோ?

எல்லாமும் வலது இந்த மனமாயை ஏழையாம்
என்னால் அடக்க வசமோ?

இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிராகி

எங்குநிறை கின்றபொருளே.(எங்குநிறை கின்றபொருள்4.)



## முடவன் கொம்புத் தேனை இச்சித்தபடி

தன்னையே தாழ்த்திக் கொளுதல் தாயமானவரின் பண்புகளுள் ஒன்று. ஆண்டான் அடிமைபோல் அடக்கம் உடையவராகவே தன்னைப் பாடல்களில் சுட்டுகின்றார்.

பாவியாகிய தான் இந்த உடலிலிருந்து உய்வு பெற்று அத்துவிதத்தில் வாஞ்சை கொண்டமை, முடவன் கொம்புத் தேனை இச்சித்தபடி அமைந்தது எனக் காடடுகின்றார்.

“ஆக்கைஎனும் இடிகரையை மெய்என்ன பாவிநான்

அத்துவித் வாஞ்சை ஆதல்

அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி. (சின்.2)

---

- “வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு வழக்கு” என இறைவனை வகுத்த விதியையும் (சுக.3),
- “பொல்லாத சேயெனில் தாய் தள்ள லிதமோ” என இறைவன் விலகிவிடலாகாது என்தையும் (சுக.3),
- “தகைத்தலம் விளங்குமொரு நெல்லியங்கனி” என்னும் பழமொழியினையும்
- வேதாகமப் புருஷார்த்தமும் (சச்சி.7),
- “உள்ளங்கையில் நெல்லிக்கனி யெனவிண் ணவர் காட்சியும்” (ஆகார.8),
- “காயாத மரமீது கல்லேற செல்லுமோ?” என வினைத் துன்பமும் (சச்கி.8)
- “இடுக்குவார் கைப்பிள்ளை, எனத் தன்னிலையும் (பன்மாலை.6)
- “கன்று மனத்துடன் ஆட தழை தின்னல்” எனத் தான்பெற்ற கல்வி கேள்விக்கு இடையே உள்ள குழப்பமும்

பழமொழிகளால் விளக்கப்படுகின்றன.

## இரு பழமொழிகளும் பல பழமொழிகளும்.

இயலாத காரியத்தைச் செய்து விடுவோம் என மார்த்தட்டுவாரை இருபழமொழி இணைத்து விளக்குகின்றார்.

"கல்லிற் பசிய நாரூரித்துக் கடுகில் பெரிய கடலை அடைக்கும்

அல்லிற்றகரிய அந்தகனார்.. … (சொல்லற.1)

- வீடுபேறு பெறக் கருதுபவனுக்கு வெளி உலகக் காட்சி "எட்டுக் கடங்காச் சொப்பனம்" ஆனமையும் (சொல்லற.10)
- போதத்தால் அவத்தைத் தேடல் "நீதியா விளக்கெடுத்து இருள் தேடவும் சிக்காமை" எனவும் (ஆசை.17)
- சிவாகமங்களில் கூறப்படும் பொருளை எண்ணல் இயலாது, "பொருதிரைக் கடலுள் மணல் எண்ணலாம்" எனவும் (ஆசை.18)
- மோனமுறை உணர்ந்தார் யாதும் முயலாமை "நிறை குடந்தான் நீர்கோள்ளுமோ" (உடல்.17) எனவும்,
- இறையை விட்டுப் பிறரை கருத்தில் கொள்ளும் பேதமை "பூவிற்கும் வான்கரையில் புல்விற்போர்" நிலை (திடமுற.5) எனவும்,
- உடலுள்ள உயிரை வைத்தமை காற்றை பிடித்து மட் கரகத் தடைத்தபடி (பெரிய.1) எனவும்,
- இறை உணர்த்திய அறிவை, சொல்லால் எடுத்து மொழி நினைத்தல், "துரும்பு பற்றிக் கடல்கடக்கும் துணிவு" எனவும் (கல்லா.1)
- அருள்சித்தி இன்றி நாம் இன்மை, "வித்தின்றி யாதும் விளைவது உண்டோ" (பரா.73) எனவும்,
- இறைஅருள் நாட்மின்றிப் பேசலைக் கேட்டதையே சொல்லம் கிளி, (பரா.189)
- இறையின்றித் தான் நினைவு நெஞ்சம் எவரும் இன்மையைத் "தாயின்றிச் சூலுமண்டோ" (பரா.210) எனவும்,

---

- மாயையேரை எத்துணை அறிவுறுத்தினாலும் பயனின் றென்பது "வைத்த கவரலம்பின் மண்போகுமா (பரா.294) எனவும்,
- வாய்பேசி இன்பமில்லை என்பதை "வாயால் கிணறு கெட்டவாறு (பரா.350) எனவும்
- அறிவில் வந்த இருள், அந்தகனுக்கு எங்கும் இருள் (எந்.தத்.16) எனவும்,
- புறக்கருவி முதலிய முற்றும் கெடுதல், "போன வழி புல்முறைப்பது" (எந்.தத்.15) எனவும்,
- இறையன்பர் பொய்மையாய சொற்கண்டால ஓடல் "கற்கண்டால் ஓடுகின்ற காக்கை" (எந்.அன்.5) எனவும்,
- கர்மங்கள் இறைக் கருணைக்கு முன் நில்லா என்பது "காகமானது கோடிகூடி நின்றாலும் ஒரு கல்லின் முன் எதிர் நிற்குமோ" (எங்கு.6) எனவும்
- விழலுக்க இறைந்த நீர் என்பது
  "மெல்லியலார் மோக விழற்கிடைப்பே னையாநின்
  
  எல்லையிலா னந்தநல மிச்சித்த லாகாதோ (ஆகாதோ)

பெற்றவர்க்குத் தானே பிள்ளை வருத்தம் என்பது,

"பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை

பெறாப்பேதை அறிவாளோ பேரா னந்தம் (பெற்றவட்1)

இந்நிலைகள் தாயமானவர் பயன்கொண்ட பல பழமொழிகளைக் காட்டுகின்றன.

## சில வழக்குகளையும் எடுத்தாளுதல்

பழமொழிகளோடு தொடர்புற்ற நிலையில் சில வழக்குகளையும் எடுத்தாள்கிறார்.

- "இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பரென் றெண்ணவோ திடமில்லையே (எங்கும்.6)
- "உண்டவர்கது அன்றி உட்பசியோயுமோ?" (பொன்னை.70)
- "ஆயிரஞ் சொன்னாலும்அறியாத (பரா.302)
- "ஒருரையாய் வாய்க்கும் உண்மைக்கு ஓரனந்த நூல் கோடிப் பேருரை யாற் பேசல்" (பரா.304)
- " தாயிருந்தும் பிள்ளை தளர்தல்" (பரா.349)
- "கடலில் வாழ் துரும்பு" (எந்.தத்.14)
- "கைவிளக்கின் பின்னே போய் காண்பர்" (எந்.பொ.1)

என்பன உலகில் வழங்கும் வழக்கு நிலையில், பழமொழி நிலைக்கு வராவிடினும், பயன்படுத்தப்பட்டுள்ளன.

---



## பேச்சு வழக்குச் சாயல் காட்டி வரும் பழமொழிகள்

- பட்டபகல் (கருணா.4. சச்சி.11, பரா.362, எந்.நிற்கு.10)
- வெட்டவெளி (பரா.362)
- வெள்ள வெளி (நினைவொன்று.6)
- தேடாத தேட்டினரே (பரா.234)
- நெக்குருகுதல் (எங்கும்.5)
- நெக்காடவே (தேசா.5)
- நெக்குருக (வம்பனேன். 4)
- கன்னங்கரிய (பரா.266)
- சின்னஞ் சிறியேன் (பைங்க.22)
- தன்னந்தனியே (பைங்க.22)
- செக்கச் சிவக்க (அனந்த.3)

என வருவன, பேச்சு வழக்குச் சாயல் காட்டி அமைகின்றன.

----------------------------------------------------------------------------------------------------------------

தாயுமானவர் தமது பாடல்களில் அழகும், ஆற்றலும் வாய்ந்த சொற்களைக் கையாண்டும், பொருள் புலப்பாடு என்ற நோக்கிலும், படிப்பார்க்கு அல்காரம் ஆகி இன்பம் பயக்கும் வகையிலும் அழகிய உவமை. உருவகங்கள், ஓசைநயம், பழமொழிகள், நடை ஆகியவற்றைக் கையாண்டும், சந்த நயங்களை மிகுதியாக பயன்படுத்தியும், கட்டுக் கோப்பாக இயற்றியுள்ளார்.

இதனால் தமிழ்க் கவிதை வரலாற்றில் மட்டுமல்லாது, தமிழ் இலக்கிய வரலாற்றிலும், ஆன்மீக வரலாற்றிலும், இந்திய தத்துவ வரலாற்றிலும் இவருடைய கவிதைகள் இடம்பெற்றுள்ளன என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



வாழ்க வளமுடன்